# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க,
# பாவனையாளர் கடன் சட்டம்

---

*[1982, ஒகத்து மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

**1982, ஒகத்து மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 1.75      தபாற்செலவு: சதம் 75

# 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டம்

[1982, ஓகத்து மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 16/81
1454

வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளுக்கான திறத்தவர்களின் கடமைகளை வரையறுப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்வினைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்குவரும் தேதியும்.

1. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கக்கூடியதான அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்புடைமை.

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டமானது நடைமுறைக்கு வந்ததன் பின்னர் இலங்கையில் செய்துகொள்ளப்பட்ட எல்லா வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகள் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளின் உருவாக்கமும் உள்ளடக்கமும்

வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகள் தொடர்பான தேவைப்பாடுகள்.

3. (1) எவையேனும் பண்டங்கள் தொடர்பில் ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை செய்துகொள்ளப்படுவதன் முன்னர், உடன்படிக்கையிலன்றி வேறுவகையாக வாடகைக்குன்னும் வாடகையாளருக்கு, அவரால் பண்டங்களைக் காசுக்கு கொள்வனவு செய்துகொள்ளக்கூடியதான விலையினை (இது இப்பிரிவில் "காசு விலை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எழுத்தில் குறிப்பிடுதல் வேண்டும் :

ஆயின்,—

(அ) வாடகையாளர் பண்டங்களை அல்லது அதே மாதிரியான பண்டங்களைப் பார்வையிட்டிருந்து அத்துடன், அவர் பார்வையிடும் நேரத்தில், ஒன்றில் பண்டங்கள் முழுமையினதும் அல்லது பண்டங்களில் அடங்கியுள்ளதான எல்லா வேறுபட்ட பொருள்களினதும் அல்லது பொருட்சோடிகளதும் காசு விலையினை தெளிவாக எடுத்துக் கூறும் சீட்டுக்கள் அல்லது சுட்டுத்துண்டுகள் பண்டங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தால் அல்லது பண்டங்களுடன் சேர்த்து வெளிக்காட்டி வைக்கப்பட்டிருந்தால் ; அல்லது

(ஆ) வாடகையாளர், பண்டங்களை, ஒன்றில் பண்டங்கள் முழுமையினதும் அல்லது பண்டங்களில் அடங்கியுள்ளதான எல்லா வேறுபட்ட பொருள்களினதும் அல்லது பொருட் சோடிகளினதும் காசு விலையினை தெளிவாக எடுத்துக்கூறும் விலைப்பட்டியல் அல்லது விலை விவர நிரல் அல்லது விளம்பரம் ஒன்றுடன் தொடர்புறுத்திநோக்கி தெரிவு செய்திருந்தால்,

இவ்வுட்பிரிவினால் சுமத்தப்பட்ட தேவைப்பாடுகள் போதுமானவாறு இணங்கியொழுகப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2—எ 63051—7,025(04/82)

(2) 1ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்பட்டிருந்தும் அத்துடன்—

(அ) வாடகையாளராலும், உடன்படிக்கைக்கான வேறெல்லாத் திறத்தவர்களினாலும் அல்லது அவர்கள் சார்பிலும் உடன்படிக்கையானது ஆக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டும்;

(ஆ) உடன்படிக்கையானது—

(i) உடன்படிக்கை தொடர்புடைய பண்டங்களின் வாடகைக் கொள்வனவு விலையையும் காசு விலையையும், அத்துடன் வாடகைக் கொள்வனவு விலை, எத்தவணைக் கட்டுப்பணங்களால் செலுத்தப்படுதல் வேண்டுமோ அத்தவணைக் கட்டுப்பணம் ஒவ்வொன்றினதும் தொகையையும், ஒவ்வொரு தவணைக்கட்டுப்பணமும் கொடுபடற்பாலதான தேதியையும், அல்லது தேதியைத் தீர்மானிக்கும் விதத்தையும் பற்றிய கூற்றொன்றையும்;

(ii) செலுத்தப்பட்ட வைப்புப் பற்றிய கூற்றொன்றையும்;

(iii) உடன்படிக்கை தொடர்புடைய பண்டங்களைக் கண்டறியப் போதுமான அதுபற்றிய நிரலொன்றையும்,

உள்ளடக்கியும்;

(இ) இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்ட பதங்களில் ஓர் அறிவித்தலை ஆகக்குறைந்தது உடன்படிக்கையின் மற்றைய உள்ளடக்கங்களளவு அத்தகைய முக்கியத்துவம் கொடுத்து உடன்படிக்கை உள்ளடக்கியும்; அத்துடன்

(ஈ) உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நாளிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் வாடகையாளருக்கு உடன்படிக்கையின் பிரதியொன்றை ஒப்படைத்தும் அல்லது அனுப்பியும்,

இருந்தாலன்றியும், ஒரு சொந்தக்காரர், ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையை அல்லது ஏதேனும் உடன்படிக்கை தொடர்பான உத்தரவாத ஒப்பந்தத்தை அல்லது வாடகையாளரிடமிருந்து பண்டத்தை மீளப்பெறுவதற்கான ஏதேனும் உரிமையை வலுவுக்கிட உரித்துடையவராதலாகாதென்பதுடன், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் கொடுபடற்பாலதான பணம் தொடர்பில் வாடகையாளரால் கொடுக்கப்பட்ட அல்லது உடன்படிக்கை தொடர்பில் உத்தரவாத ஒப்பந்தமொன்றின்கீழ் கொடுபடற்பாலதான பணம் தொடர்பாக உத்தரவாதமளிப்போனொருவரால் கொடுக்கப்பட்ட பிணைப்பொறுப்பெதுவும் வாடகையாளருக்கு அல்லது உத்தரவாதமளிப்போனுக்கு எதிராக வலுவுக்கிடப்படற்பாலதாதலாகாது.

(3) வாடகைக் கொள்வனவு விலையின் ஏதேனும் பாகம் காசாகவன்றி அல்லது காசோலை மூலமாகவன்றி வேறுவகையாக செலுத்தப்படுமிடத்து அல்லது செலுத்தப்பட இருக்குமிடத்து, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையானது, வாடகைக் கொள்வனவு விலையின் அப்பாகத்தின் விவரணம் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் அல்லது (ஈ) என்னும் பந்தியில் அல்லது (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதில் தவறுகையொன்றுள்ளது எவ்வாறிருப்பினும், அத்தகைய உடன்படிக்கையை வலுவுக்கிடுதற்கு எந்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதோ அந்நீதிமன்றம், அத்தகைய தவறுகை வாடகையாளரைப் பங்கப்படுத்தவில்லையென்றும் விடயத்தின் எல்லாச் சந்தருப்பத்தைப் பொறுத்தும் அத்தகைய உடன்படிக்கையை வலுவுக்கிடுதல் நியாயமானதும் ஒப்புரவானதும் எனத் திருப்திப்படுமாயின், ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை வலுவுக்கிடப்படலாம்.

### வாடகையாளர்களைப் பாதுகாத்தல்

4. (1) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒவ்வொன்றிலும்,— கட்டுறுத்துகளும் நிபந்தனைகளும்.

(அ) பண்டங்களை தலையீடற்ற உடைமையில் வைத்திருத்தற்கும், துய்த்தற்கும் ஆன ஓர் உட்கிடையான கட்டுறுத்து ;

(ஆ) சொத்துவம் எப்போது சென்றடைவதற்கு உள்ளதோ அப்போது பண்டங்களை விற்பதற்கானவோர் உரிமையினை சொந்தக்காரரானவர் கொண்டிருப்பார் என்பதற்கு, சொந்தக்காரர்மாட்டு ஓர் உட்கிடையான நிபந்தனை ;

(இ) சொத்துவம் எப்போது சென்றடைவதற்கு உள்ளதோ அப்போது எவரேனும் மூன்றும் கட்சிக்காரர் சார்பில் பண்டங்கள், பொறுப்புக்கள் அல்லது வில்லங்கங்கள் எவையும் அற்றவையாக இருத்தல் வேண்டும் என்னும் ஓர் உட்கிடையான நிபந்தனை,

இருத்தல் வேண்டும்.

(2) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒவ்வொன்றிலும், பண்டங்கள் வணிகஞ்செய்யத்தகு தரம் உடையதாகவிருக்கும் என்பதற்கு உட்கிடையான நிபந்தனை ஒன்று இருத்தல் வேண்டும்; ஆனால், அத்தகைய ஒரு நிபந்தனையானது—

(அ) உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நேரத்தில் சொந்தக்காரர் நியாயமாக, அறிந்திருக்கமுடியாததான குறைபாடுகள் தொடர்பாக ;

(ஆ) வாடகையாளர் பண்டங்களை அல்லது அவற்றின் மாதிரிப்பொருள் ஒன்றினை பரிசோதனை செய்திருந்தவிடத்து, பரிசோதனை வெளிக்காட்டியிருக்க வேண்டியதான குறைபாடுகள் தொடர்பாக ;

(இ) உடன்படிக்கையில் குறைபாடுகள் எனவோ சரி அல்லது அதே பயன்கொண்ட வேறு ஏதேனும் விவரணத்தினாலோசரி குறிப்பீடு செய்யப்பட்டு அதில் குறித்துரைக்கப்பட்டவையான குறைபாடுகள் தொடர்பாக ;

(ஈ) பண்டங்கள் இரண்டாம் கையாட்சியானவையாக இருந்து உடன்படிக்கை அதே பயனைக் கொண்டவொரு கூற்றைக் கொண்டதாகவும் இருந்தால்,

உட்கிடையாகவுள்ளதாகக் கருதப்படுதலாகாது.

(3) வாடகையாளர் எழுத்தில் வெளிப்படையாகவாயினுஞ்சரி அல்லது உட்கிடையாகவாயினுஞ்சரி, குறிப்பாக எந்த நோக்கத்திற்கென பண்டங்கள் தேவைப்படுகின்றன என்பதை சொந்தக்காரருக்குத் தெரிவித்துள்ளவிடத்து, அத்தகைய நோக்கத்திற்கு பண்டங்கள் நியாயமான அளவு பொருத்தமாகவிருக்கும் என்பதற்கு அங்கு உட்கிடையான நிபந்தனையொன்று இருத்தல் வேண்டும்.

(4) பண்டங்கள், மாதிரிப்பொருள் ஒன்றினைத் தொடர்புறுத்தி வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றன்கீழ் வாடகைக்கு விடப்படுமிடத்து அல்லது விற்க உடன்பட்டுக்கொள்ளப்படுமிடத்து, அங்கு—

(அ) சொந்தக்காரர்மாட்டு, தரத்தில், முழுவாசியும் மாதிரிப் பண்டத்துடன் ஒத்திருக்கும் என்னும் உட்கிடையான நிபந்தனையொன்றும்;

(ஆ) சொந்தக்காரர்மாட்டு, வாடகையாளர் முழுவாசியையும் மாதிரிப் பண்டத்துடன் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கான நியாயமான ஒரு சந்தர்ப்பத்தினைக் கொண்டிருப்பார் என்னும் உட்கிடையான நிபந்தனையொன்றும்,

இருத்தல் வேண்டும்.

(5) பண்டங்கள், விவரணங்கொண்டு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின்கீழ் வாடகைக்கு விடப்படுமிடத்து அல்லது விற்க உடன்பட்டுக்கொள்ளப்படுமிடத்து, பண்டங்கள், விவரணத்துடன் ஒத்திருக்கும் என்னும் உட்கிடையான நிபந்தனையொன்று இருத்தல் வேண்டும்; அத்துடன் பண்டங்கள் மாதிரிப்பொருள் ஒன்றினைத் தொடர்புறுத்தியும் விவரணங்கொண்டும் உடன்படிக்கையின்கீழ் வாடகைக்கு விடப்படின், அல்லது விற்க உடன்பட்டுக்கொள்ளப்படின், பண்டங்கள், விவரணத்துடன் ஒத்திராவிடின் பண்டங்களின் முழுவாசியும் மாதிரிப் பண்டத்துடன் ஒத்திருப்பதானது போதுமானதாதலாகாது.

(6) சொந்தக்காரர் ஒருவர், உடன்படிக்கை செய்துகொள்ளப்படுவதன் முன்னர் ஏற்பாடானது வாடகையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதெனவும், அதன்பயன் அவருக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதெனவும் எண்பித்தாலன்றி, (3) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நிபந்தனையினை விலக்குவதான அல்லது திரிபுபடுத்துவதான வாடகைக்கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின் ஏற்பாடு எதன்மீதும் தங்கியிருப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

வாடகைக் கொள்வனவு விதிப்பனவுகளின் மீதான வரையறை.

5. (1) இப்பிரிவில்—

(அ) வாடகைக் கொள்வனவு தவணைக்கட்டுப்பணம் தொடர்பில் "காசு விலைத் தவணைக்கட்டுப்பணம்" என்பது, (ஆ) என்னும் பந்தியில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதான ஏதேனும் வைப்புப் பணம் கழிவாக, வாடகைக் கொள்வனவு விலையின் மொத்தத் தொகைக்கு வாடகைக் கொள்வனவுத் தவணைக் கட்டுப்பணத் தொகை எந்த விகிதாசாரத்தில் அமைந்துள்ளதோ அதே விகிதாசாரத்தில் தேறிய காசு விலைக்கு அமைந்ததான ஒருதொகை எனப் பொருளாகும்;

(ஆ) "வைப்புப்பணம்" என்பது, ஏதேனும் பணத்தொகையானது பணத்தைக் கொடுப்பனவு செய்வதன்மூலம் அல்லது பண்டங்களைக் கைமாற்றுதல்மூலம் அல்லது ஒப்படைப்பதன்மூலம் அல்லது ஏதேனும் வேறுவகையாகக் கொடுத்துத் தீர்க்கப்பட இருப்பினும்சரி அல்லது கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பினும்சரி, வாடகையாளரால் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் வைப்புப்பணமாகவோ அல்லது வேறு தொடக்கக் கொடுப்பனவாகவோ கொடுபடற்பாலதான அல்லது ஏதேனும் அத்தகைய வைப்புப் பண வகையாக அல்லது கொடுப்பனவு வகையாக உடன்படிக்கையின்கீழ் வரவு வைக்கப்பட்ட அல்லது வரவு வைக்கப்படவுள்ள அத்தொகை எனப் பொருளாகும்;

(இ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் கொண்டுள்ளதான பண்டங்கள் தொடர்பில், "தேறிய காசு விலை" என்பது, இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் வைப்புப்பணம் கழிவாக, 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உபபந்தியின் கீழான வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய பண்டங்களின் காசு விலை எனப் பொருளாகும்;

(ஈ) எவையேனும் பண்டங்களுக்கான வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பில் "தேறிய வாடகைக் கொள்வனவு விதிப்பனவுகள்" என்பது, அத்தகைய பண்டங்களின் தேறிய வாடகைக் கொள்வனவு விலைக்கும், தேறிய காசு விலைக்கும் உள்ள வித்தியாசம் எனப் பொருளாகும்;

(உ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றில் கொண்டுள்ளதான பண்டங்கள் தொடர்பில், "தேறிய வாடகைக் கொள்வனவு விலை" என்பது,—

(i) வாடகையாளருக்கு அல்லது அவரின் கட்டளைகொளிக்கு பண்டங்களை அல்லது அவற்றுள் எவற்றையேனும் ஒப்படைப்பதன் செலவுகளை மேவுதற்குக் கொடுபடற்பாலதானதாவதும் வாடகைக் கொள்வனவு விலையில் உள்ளடக்கப்பட்டதாக உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டதுமான ஏதேனும் தொகை;

(ii) பண்டங்கள் அல்லது உடன்படிக்கை அல்லது இரண்டும் தொடர்பாக, ஏதேனும் சட்டத்தின்கீழ் பதிவு செய்தற் கட்டணங்களை அல்லது வேறு கட்டணங்களை மேவுவதற்கெனக் கொடுபடற்பாலதானதாவதும், வாடகைக் கொள்வனவு விலையில் உள்ளடக்கப்பட்டதாக உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டதுமான ஏதேனும் தொகை;

(iii) பண்டங்கள் தொடர்பாக காப்புறுதிக்கென கொடுபடற்பாலதானதாவதும் வாடகைக் கொள்வனவு விலையில் உள்ளடக்கப்பட்டதாக உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டதுமான ஏதேனும் தொகை;

(iv) நிறுவுவதற்கான விதிப்பனவுகளாக கொடுபடற்பாலதான தாவதும் வாடகைக் கொள்வனவு விலையில் உள்ளடக்கப் பட்டதாக உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டது யான ஏதேனும் தொகை இருப்பின், அத்தொகை ;

(v) பந்தி (ஆ) என்பதில் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட வாறான ஏதேனும் வைப்புப்பணம்; அத்துடன்

(vi) பண்டங்களின் வாடகையின்மீதான அல்லது விற்பனை மீதான ஒரு வரியாகவுள்ள வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்டவாறான வியா பார மொத்த வரியாக அல்லது அத்தகைய வேறு வரி யாகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொகை,

கழிந்த, 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந் தியின் (i) ஆம் உபபந்தியின்கிழான வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய பண்டங்களின் வாட கைக் கொள்வனவு விலையின் மொத்தத் தொகை எனப் பொரு ளாகும்;

(ஊ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பாக "நியதிச் சட்ட முறையான விதிப்பனவுகள்" என்பது, (2) ஆம் உட்பிரி வின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிக்கப்பட்ட தொகை என்று பொருளாகும்.

(2) நியதிச்சட்டமுறையான விதிப்பனவுகள், வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி பணம் கடன்கொடுக்கும் வீதங்களையும் தேசிய பொருளா தாரத்தின் நலனையும் கருத்திற்கொண்டு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாக உள்ளவரான அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச் சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான, ஆண்டொன்றுக்கு அத்தகைய நூற்றுவீத விகிதத்தில் பின்வரும் வாய்ப்பாட்டிற்கிணங்க, கணிக்கப்பட்ட தொரு தொகையாக இருத்தல்வேண்டும் :—

$$\text{நிவி} = \frac{\text{தேகாவி} \times \text{வீ} \times \text{கா}}{100}$$

இதன்படி நிவி = நியதிச்சட்டமுறையான விதிப்பனவுகளைக் குறிக்கும்;

தேகாவி = தேறிய காசு விலையைக் குறிக்கும்;

வீ = வீதத்தைக் குறிக்கும்; அத்துடன்

கா = என்பது, உடன்படிக்கைத் தேதிக்கும், உடன் படிக்கையின்கீழ் வாடகைக் கொள்வனவின் கடைசித் தவணைக் கட்டுப்பணம் செலுத்தப்படற் பாலதான தேதிக்கும் இடையே கடந்துபோவ தான ஆண்டுகள்கொண்டு அல்லது ஆண்டு களின் பின்னங்கள்கொண்டு குறிக்கப்படும் காலத்தைக் குறிக்கும்.

இவ்வுட்பிரிவில், "மத்திய வங்கி" என்பது, நாணயச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்.

(3) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்று தொடர்பிலான தேறிய வாடகைக் கொள்வனவு விதிப்பனவுகள் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, கணக்கிடப்பட்ட அத்தகைய உடன்படிக்கை தொடர்பிலான நியதிச்சட்ட முறையான விதிப்பனவுகளை விஞ்சுமிடத்து, வாடகையாளர் தேறிய வாடகைக் கொள்வனவு விதிப்பனவுகள் மேலே சொல்லப்பட்ட நியதிச்சட்டமுறையான விதிப்பனவுகளை எத்தொகையால் விஞ்சுகிறதோ அத்தொகையால் அவருக்குள்ள பொறுப்பினைக் குறைத்துக்கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) வாடகையாளர், தமது பொறுப்பினை (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகையினுல் குறைத்துக்கொள்ளுவதற்கு உரித்துடையவராகுமிடத்து, அவரது பொறுப்பானது அத்தொகையினுல் குறைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தொகையானது, உடன்படிக்கையின்கீழ் மற்றப்படிக்கு செல்லுமதியாக உள்ளதான தொகைக்கு எதிராக வாடகையாளரால் விட்டழிக்கவும்படலாம்; அத்துடன், அவ்வாறு அது விட்டழிக்கப்படாத அளவுக்கு, சொந்தக்காரரிடமிருந்து அவருக்கு வருமதியாக உள்ளதான தனிசொன்ருக வாடகையாளரால் அறவிடவும்படலாம்.

6. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்று எப்பண்டங்கள் தொடர்பானதாக உள்ளதோ அப்பண்டங்களின் சொத்துவமானது உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கொள்வனவு முற்றுப்பெற்றதன்மேல் மாத்திரமே வாடகையாளனைச் சென்றடைதல் வேண்டும். சொத்துவம் சென்றடைதல்.

### வாடகையாளரின் உரிமைகளும் கடப்பாடுகளும்

7. (1) வாடகையாளர், ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடருங் காலத்தின்போது எந்நேரத்திலேனும் அத்துடன், அவ்வாறு செய்வதற்கான அவரது முன்னத்தை எழுத்தில், பதினுன்கு நாட்களுக்குக் குறையாததான அறிவித்தலை சொந்தக்காரருக்கு வழங்கியதன் பின்னர், (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் கணக்கிடப்பட்டதான தள்ளுபடியினைக் கழித்துக்கொண்டு, வாடகைக் கொள்வனவு விலையினை அல்லது அதன் மீதியினை சொந்தக்காரருக்குச் செலுத்துதல் மூலம் அல்லது செலுத்த முற்படுதல்மூலம் பண்டங்களின் கொள்வனவினை முற்றுப்பெறச் செய்யலாம். எந்நேரத்திலும் தள்ளுபடியுடன் கொள்வனவு செய்வதற்கு வாடகையாளருக்குள்ள உரிமை.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தள்ளுபடியானது, இன்னமும் செல்லுமதியானதாக வராததான வாடகைக் கொள்வனவு விலையின் மீதியானது வாடகைக் கொள்வனவு விலைக்கு அமைந்ததான அதே விகிதாசாரத்தில், வாடகைக் கொள்வனவு விதிப்பனவுகளுக்கு அமைந்த தொகை ஒன்றன் மூன்றில் இரண்டு பாகங்களுக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில் "வாடகைக் கொள்வனவு விதிப்பனவுகள்" என்பது, வாடகைக் கொள்வனவு விலைக்கும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் கூறப்பட்டவாறன காசு விலைக்குமுள்ள வித்தியாசம் எனப் பொருளாகும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளானவை, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் முரணுகக் கொண்டுள்ள, எது எவ்வாறிருப்பினும், பயனுடையவையாக இருத்தல் வேண்டும்; ஆனல், உடன்படிக்கையின் நியதிகள், இப்பிரிவினுல் அனுமதிக்கப்பட்டதான தள்ளுபடியிலும் பார்க்க அதிகமான தள்ளுபடிக்கு வாடகையாளரை உரித்துடையவராக்குமிடத்து, வாடகையாளர், உடன்படிக்கையினுல் ஏற்பாடு செய்யப்பட்டதான தள்ளுபடிக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

எந்நேரத்திலேனும் உடன்படிக்கையினை முடிவுறுத்திக் கொள்வதற்கான வாடகையாளரின் உரிமை.

8. (1) வாடகையாளர், ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழான இறுதிக் கொடுப்பனவு செல்லுமதியாக வருவதற்கு முன்னரும் அவ்வாறு செய்வதற்கான அவரது முன்னம் பற்றி பதினுன்கு நாட்களுக்குக் குறையாததான அறிவித்தலை சொந்தக்காரருக்கு எழுத்தில் வழங்கியதன் பின்னரும் பண்டங்களை சொந்தக்காரருக்கு மீள ஒப்படைத்தல் அல்லது கொடுக்க முற்பட்ட பின்னரும் எந்நேரத்திலாயினும், வாடகைக் கொள்வனவு விலை தொடர்பில் செல்லுமதியாகத் திரண்டுள்ளதும் அவரால் செலுத்தப்படாதுள்ளதுமான தொகைகளை (2) ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்துவதற்கு ஆளான தொகைகள் எவையும் இருப்பின் அத்தொகை உட்பட செலுத்துதல் அல்லது செலுத்த முன்வருதல் மூலம் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையினை முடிவுறுத்தலாம்.

(2) வாடகையாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் உடன்படிக்கையினை முடிவுறுத்துமிடத்தும், உடன்படிக்கையானது, அத்தகைய முடிவுறுத்துகை காரணமாக குறிக்கப்பட்டதான தொகை ஒன்றினைச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளவிடத்தும், அத்தகைய தொகையினைச் செலுத்துவதற்கான வாடகையாளரின் பொறுப்பானது, பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும்; அவையாவன—

(அ) செலுத்தப்பட்ட தொகைகளின் முழு மொத்தமும் முடிவுறுத்துகைக்கு நேர்முன்னர் வாடகைக் கொள்வனவு விலை தொடர்பில் செல்லுமதியாக உள்ள தொகையும் வாடகைக் கொள்வனவு விலையின் அரைவாசியை விஞ்சுமிடத்து, வாடகையாளர் அவ்வாறு குறிக்கப்பட்ட தொகையினைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது;

(ஆ) செலுத்தப்பட்ட தொகைகளின் முழு மொத்தமும் முடிவுறுத்துகைக்கு நேர்முன்னர் வாடகைக் கொள்வனவு விலை தொடர்பில் செல்லுமதியாக உள்ள தொகையும் வாடகைக் கொள்வனவு விலையின் அரைவாசியை விஞ்சாதவிடத்து, வாடகையாளர், சொல்லப்பட்ட முழு மொத்தத்துக்கும் சொல்லப்பட்ட அரைவாசிக்கும் அல்லது உடன்படிக்கையில் குறிக்கப்பட்டதான தொகைக்கும் இடையேயான வித்தியாசம் ஆகிய இவற்றுள் எது குறைந்ததோ அதனைச் செலுத்துவதற்கு ஆளானவராதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிலுள்ள எதுவும், முடிவுறுத்தலுக்கு முன்னர் செல்லுமதியாகத் திரண்டிருக்கக்கூடியதான ஏதேனும் வாடகைக்கான பொறுப்பு எதனிலுமிருந்து வாடகையாளரை விடுவிப்பதாகாது.

(4) ஏதேனும் உடன்படிக்கையிலுள்ள எவ்வேற்பாட்டினுல் இப்பிரிவின்மூலம் வாடகையாளரொருவருக்கு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையினை முடிவுறுத்துவதற்கு வழங்கப்பட்டதான உரிமை விலக்கப்

பட்டதோ அல்லது மட்டுப்படுத்தப்பட்டதோ அல்லது இச்சட்டத்தின் மூலம் சுமத்தப்பட்ட பொறுப்புகளுக்கு மேலதிகமாக ஏதேனும் பொறுப்பு இப்பிரிவின்கீழ் ஒரு வாடகையாளரால் வாடகைக் கொள்வனவு உடன் படிக்கை முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக அவர்மீது சுமத்தப்பட்டதோ ஏதேனும் அவ்வேற்பாடு வறிதானதாதல் வேண்டும்.

(5) இப்பிரிவிலுள்ள எதுவும், இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளின்கீழும் அவற்றின் பயனுகவும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றினை முடிவுறுத்துவதற்கு வாடகையாளர் ஒருவருக்குள்ள உரிமை எதனையும் பாதித்தலாகாது.

இரண்டிற்கு அல்லது அதற்கதிகமான உடன் படிக்கைகள் தொடர்பாக கொடுப்பனவு களைப் பற்றிக் கொள்வதற்கான வாடகையாளரின் உரிமை.

9. ஒரே சொந்தக்காரருக்கு இரண்டிற்கு அல்லது அதற்கும் அதிகமான உடன்படிக்கைகள் தொடர்பான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு ஆளானவரான வாடகையாளர் ஒருவர், மூரணுனதாக உடன்படிக்கை எது எவ்வாறிருப்பினும், எல்லா உடன்படிக்கைகளின் கீழும் அப்போது செல்லுமதியாக உள்ளதான முழுத்தொகையினைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதுமானதல்லாததான, உடன்படிக்கை தொடர்பான கொடுப்பனவு எதனையும் செய்ததன்மேல், உடன்படிக்கைகளுள் ஏதேனுமொன்றன்கீழ் செல்லுமதியாக உள்ளதான தொகையினை அல்லது தொகைகளைத் திருப்திசெய்வதில் அல்லது திருப்திசெய்தல் தொடர்பாக அல்லது இரண்டிற்கு அல்லது அதற்கு அதிகமான உடன்படிக்கைகளின்கீழ் செல்லுமதியாக உள்ளதான தொகைகளைத் திருப்தி செய்வதில் அல்லது திருப்திசெய்தல் தொடர்பாக அவரால் அவ்வாறு செலுத்தப்பட்டதான தொகையினை அவர் தகுந்ததெனக் கருதும் அத்தகைய விகிதாசாரத்தில் பற்றிக்கொள்ள உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன், மேற்சொல்லப்பட்டவாறு அவர், ஏதேனும் அத்தகைய பற்றிக்கொள்ளுதலைச் செய்யத்தவறினுல் அவ்வாறு செலுத்தப்பட்டதான தொகையானது, இப்பிரிவின் பயனுக, உடன்படிக்கைகள் எந்தக் கிரம வரிசையில் செய்து கொள்ளப்பட்டனவோ அந்தக் கிரமவரிசையில் முறையே உள்ள வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளின்கீழ் செல்லுமதியாக உள்ள தொகைகளைத் திருப்திசெய்யும் முகமாகப் பற்றிக்கொள்ளப்பட்டதாக நிலைத்தல் வேண்டும்.

வாடகைக் கொள்வனவு உடன்படிக் கையின்கீழ் வாடகையாளரின் உரிமையினை அல்லது அக்கறையினை சாட்டுதல் செய்தலும், மாற்றுதலும்.

10. (1) வாடகையாளர், சொந்தக்காரரின் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவரின் எழுத்திலான சம்மதத்துடன், அல்லது அவரின் எழுத்திலான சம்மதம் நியாயமற்ற முறையில் கொடுக்கப்படாதிருப்பின் அவரின் சம்மதம் இல்லாமல் ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழான அவரின் உரிமையினை, உரித்தினை, அக்கறையினை அத்துடன் கடப்பாடுகளை சாட்டுதல் செய்யலாம்.

(2) இப்பிரிவில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு நீங்கலாக, (1) ஆம் உட்பிரிவின்கீழான சாட்டுதல் ஒன்றுக்குச் சொந்தக்காரரொருவரால் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவரால் அவரின் சம்மதத்திற்கெனக் கொடுப்பனவு அல்லது வேறு பிரதிபயன் எதுவும் தேவைப்படுத்தப்படுதலாகாது என்பதுடன் சொந்தக்காரர் ஒருவர் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவர் ஒருவர் ஏதேனும் அத்தகைய கொடுப்பனவை அல்லது வேறு பிரதிபயனை அவரின் சம்மதத்திற்கெனத் தேவைப்படுத்துமிடத்து, அத்தகைய சம்மதமானது நியாயமற்ற முறையில் கொடுக்கப்படாதுள்ளதெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) வாடகையாளர் ஒருவரால் அதன் சார்பாக வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டதன்மேல், சொந்தக்காரரானவர் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவரானவர், (1) ஆம் உட்பிரிவின் கீழான சாட்டுதலொன்றுக்கு அவரின் சம்மதத்தினைக் கொடுக்கத் தவறுமிடத்து அல்லது மறுக்குமிடத்து வாடகையாளர் சாட்டுதலுக்கான சொந்தக்காரரின் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவரின் சம்மதமானது நியாயமற்றமுறையில் கொடுக்கப்படாதுள்ளதென வெளிப்படுத்துவதான கட்டளையொன்றிற்கென நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஒன்று இடப்படுமிடத்து, சம்மதமானது, நியாயமற்றமுறையில் கொடுபடாதுள்ளதெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான சாட்டுதல் ஒன்றுக்கு அத்தகைய சம்மதத்தினை வழங்குவதற்கு நிபந்தனையொன்றாக, சொந்தக்காரரானவர் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவர் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழான எல்லாத் தவறுகைகளும் சரிசெய்யப்படுதல் வேண்டுமென விதிக்கலாம்; அத்துடன் வாடகையாளரையும் சாட்டுனியையும் அத்தகையவை தொடர்பாக வாடகையாளரின் தொடர்ந்துவரும் தனிப்பட்ட பொறுப்பினைப் பாதிக்காது சாட்டுனி சொந்தக்காரருடன் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவருடன், செலுத்தப்படாதிருப்பவையான வாடகைத் தவணைக் கட்டுப்பணங்களைச் செலுத்துவதற்குத் தனிப்பட்டமுறையில் பொறுப்பாளியாவார் என உடன்பட்டுக்கொள்வதானதும், உடன்படிக்கையின் மீதியாக உள்ள காலத்தின்போது வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையிலுள்ள எல்லா வேறு விதிப்புகளையும் நிபந்தனைகளையும் புரிவதெனவும் பின்பற்றுவதெனவும் உடன்பட்டுக்கொள்வதானதும், அத்துடன் அத்தகைய பொறுப்புக்கள் தொடர்பாக சாட்டுனி வாடகையாளருக்கு நட்டோத்திரவாதம் அளிப்பதாகக் கொள்வதானதுமான சொந்தக்காரரால் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவரால் அங்கீகரிக்கப்பட்டதான ஒரு படிவம் சாட்டுதல் உடன்படிக்கை ஒன்றினை எழுதி நிறைவேற்றி சொந்தக்காரரிடம் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்கான வேறு எவரேனும் திறத்தவரிடம் ஒப்படைக்குமாறும் தேவைப்படுத்தலாம்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகள், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில், முரணாக எவ்வாறிருப்பினும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் சொந்தக்காரரின் உரிமையினை அல்லது அக்கறையினை சாட்டுதல் செய்தலும் மாற்றுதலும்.

11. சொந்தக்காரர், வாடகையாளரினதும் அத்தகைய உடன்படிக்கைக்கான எல்லாத் திறத்தவர்களினதும் எழுத்திலான சம்மதத்துடன், அல்லது எழுத்திலான சம்மதம் நியாயமற்றமுறையில் கொடுக்கப்படாதிருப்பின் அத்தகைய சம்மதம் இல்லாமல் ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழான அவரின் உரிமையினை, உரித்தினை, அக்கறையினை அத்துடன் கடப்பாடுகளை சாட்டுதல் செய்யலாம். 10 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழ்ச் செய்யப்படும் சாட்டுதலொன்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

உடன்படிக்கையுடன் இணங்கியொழுக வேண்டிய வாடகையாளரின் கடப்பாடு.

12. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, வாடகையாளர் ஒருவர்—

(அ) உடன்படிக்கைக்கிணங்க வாடகையினைச் செலுத்துவதற்கும்; அத்துடன

(ஆ) மற்றப்படி, உடன்படிக்கையின் நியதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கும்,

பிணிக்கப்பட்டவராதல் வேண்டும்.

பண்டங்களின் கவனிப்புத் தொடர்பாக வாடகையாளரின் கடப்பாடு.

13. (1) முரணானதான ஓர் ஒப்பந்தம் இல்லாதவிடத்து வாடகையாளர் ஒருவர்,—

(அ) சாதாரண புத்திசாதுரியமுள்ள ஆள் ஒருவர், ஒத்த சந்தருப்பங்களின்கீழ் அதே பெரும்பகுதியும், தரமும், பெறுமதியும் ஆன அவரின் சொந்தப் பண்டங்களில் எந்தளவு கவனிப்பு எடுப்பாரோ, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்புறுத்துவதான பண்டங்களிலும் அதே அளவு கவனிப்பை எடுக்க பிணிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) பண்டங்கள் தொடர்பில், (அ) என்னும் பந்தியில் விவரிக்கப்பட்டதான, கவனிப்பை எடுத்திருந்தால், பண்டங்களின் இழப்புக்கு, அழிவுக்கு அல்லது சீர்கேட்டுக்கு பொறுப்பாளியாதலாகாது.

(2) வாடகையாளரானவர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பண்டங்களில் கவனமெடுக்கத் தவறிய காரணத்தால் ஏற்பட்ட சேதம் எதற்கும், சொந்தக்காரருக்கு நட்டஈடு வழங்குவதற்கு ஆளானவராதல் வேண்டும்.

(3) பண்டங்களின் இழப்பு, அழிவு, அல்லது சீர்கேடு ஏற்பட்டிருக்குமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் விவரிக்கப்பட்டவாறு அத்தகைய கவனிப்பை அப்பண்டங்கள் தொடர்பில் அவர் எடுத்தாரென என்பிக்கும் பொறுப்பு வாடகையாளரைச் சாரும்.

பண்டங்களைப் பயன்படுத்தல் தொடர்பாக வாடகையாளருக்குள்ள கடப்பாடு.

14. வாடகையாளர், ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்புறுத்துவதான பண்டங்களை, உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்கவல்லாது பயன்படுத்தினல் வாடகையாளர், அத்தகைய பயன்பாட்டிலிருந்து அல்லது பயன்பாட்டின்போது பண்டங்களுக்கு உறுவதான ஏதேனும் சேதத்திற்கு சொந்தக்காரருக்கு நட்டஈடு வழங்குவதற்கு ஆளானவராதல் வேண்டும்.

பண்டங்கள் எங்கே இருக்கின்றன என்பதைப் பற்றி தகவல் தருவதற்கு வாடகையாளரின் கடப்பாடு.

15. (1) வாடகைக்குப் பெறுபவர் ஒருவர், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் பயனுக, உடன்படிக்கை தொடர்புறுத்துவதான பண்டங்களை அவரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான கடமை ஒன்றன்கீழ் உள்ளவராக இருக்குமிடத்து, வாடகையாளர், சொந்தக்காரரிடமிருந்து எழுத்தில் வேண்டுகோள் ஒன்றினைப் பெற்றுக் கொண்டதன்மேல், தகவல் கொடுக்கும் நேரத்தில் அல்லது அது அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டதாயின், அஞ்சலில் சேர்க்கப்பட்ட நேரத்தில் பண்டங்கள் எந்த இடத்தில் இருக்கின்றன என்பதனை சொந்தக்காரருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) வாடகையாளர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழான வேண்டுகோள் ஒன்றினைப் பெற்றுக்கொண்ட பதினன்கு நாட்களுக்குள்ளாக, நியாயமான காரணமின்றி, சொல்லப்பட்ட தகவலைக் கொடுக்கத் தவறினல், அவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதகாலத்துக்கு மேற்படாத மறியற்றண்டனையொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

சொந்தக்காரரால் பண்டங்கள் மீள உடைமை கொள்ளப்படுமிடத்து, வாடகையாளருக்குள்ள உரிமைகள்

16. (1) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றின்கீழ் வாடகைக்கு விடப்பட்ட அல்லது விற்பதற்கு உடன்படப்பட்ட பண்டங்களை சொந்தக்காரரானவர், 19 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் மீள உடைமை கொள்ளுமிடத்து வாடகையாளரானவர், பின்வரும் தொகைகளின் கூட்டுமொத்தத்திலும் பார்க்க வாடகைக் கொள்வனவு விலை எத்தொகையால் குறைகின்றதோ அத்தொகை, ஏதேனும் இருப்பின் அதனைச் சொந்தக்காரரிடமிருந்து அறவிடலாம்; அத்தொகைகளாவன—

(அ) மீள உடைமைகொள்ளும் தேதிவரையில் வாடகைக் கொள்வனவு விலை தொடர்பாக செலுத்தப்பட்ட தொகைகள்; அத்துடன்

(ஆ) மீள உடைமைகொள்ளும் தேதியன்றுள்ள பண்டங்களின் பெறுமதி.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, மீள உடைமைகொள்ளும் தேதியன்று பண்டங்கள் எவற்றினதும் பெறுமதி என்பது, பின்வரும் தொகைகளின் கூட்டுமொத்தம் கழிவாக, அத்தேதியன்று சொந்தக்காரரால் அப்பண்டங்களுக்கென நியாயமாகப் பெற்றுக்கொள்ளப்படக்கூடியதான சிறந்த விலை எனப் பொருளாகும், அத்தொகைகளாவன—

(i) பண்டங்களை மீள உடைமை கொள்வதற்குச் சொந்தக்காரரால் உறப்பட்டதான நியாயமான செலவுகள்;

(ii) பண்டங்களைக் களஞ்சியப்படுத்துதலில், பழுதுபார்த்தலில் அல்லது பேணுவதில் சொந்தக்காரரால் செலவு செய்யப்பட்டதான எவையேனும் நியாயமான செலவுகள்;

(iii) (பண்டங்கள் சொந்தக்காரரால் பின்னர் விற்கப்பட்டுள்ளதோ அல்லது வேறு வகையாக கையுதிர்க்கப்பட்டுள்ளதோ இல்லையோ) பண்டங்களை விற்பதில் அல்லது வேறுவகையாக கையுதிர்த்ததில் ஆன நியாயமான செலவுகள்; அத்துடன்

(iv) அப்போதைக்கு வலுவிலுள்ளதான ஏதேனும் சட்டத்தின்கீழ் பண்டங்கள் தொடர்பில் செலுத்தற்பாலதானதும், வாடகையாளர் செலுத்துவதற்கு ஆளானதுமான வரிகளின் நிலுவைகளதும் வேறு செல்மதிகளதும் கொடுப்பனவுக்கெனச் சொந்தக்காரரால் செலவு செய்யப்பட்ட தொகை.

(3) வாடகைக் கொள்வனவு விலையானது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான தொகைகளின் கூட்டுமொத்தத்தை விஞ்சுமிடத்து, சொந்தக்காரரானவர், அத்தகைய விஞ்சுதொகையினை வாடகையாளரிடமிருந்து அறவிடலாம்.

(4) சொந்தக்காரரானவர், சொல்லப்பட்ட தொகையின் கொடுப்பனவுக்கான அறிவித்தல் ஒன்று வாடகையாளரால் அவரிடம் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள்கொண்ட காலப்பகுதிக்குள் இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழான, அவரிடமிருந்து செல்லுமதியாக உள்ளதான தொகையினை அல்லது அத்தகைய தொகையின் ஏதேனும் பாகத்தைச் செலுத்தத் தவறுமிடத்து, சொந்தக்காரரானவர், சொல்லப்பட்ட முப்பது நாட் காலப்பகுதி கழியும் தேதியிலிருந்து அத்தகைய தொகையின்மீது ஆண்டொன்றுக்கு பன்னிரண்டு சதவீதத்திலான வட்டியினைச் செலுத்துதற்கு ஆளாதல் வேண்டும்.

(5) சொந்தக்காரரானவர், அவரால் மீள உடைமை கொள்ளப்பட்ட பண்டங்களை விற்றுள்ளவிடத்து, பண்டங்களுக்கு அவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதான விலையானது, மீள உடைமைகொண்ட தேதியில் அவரால் நியாயமாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதான சிறந்த விலை என்பதை எண்பிக்கும் பொறுப்பு அவரைச் சாருதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, மீள உடைமைகொள்ளப்பட்ட தேதியன்று சொந்தக்காரரால் பண்டங்களுக்காகப் பெறப்படக்கூடிய மிகச்சிறந்த விலையானது—

(அ) சிங்களம், தமிழ், அத்துடன் ஆங்கில மொழிகளில் விநியோகிக்கப் படும் புதினத்தாள் ஒன்றில் வெளியிடப்பட்ட பண்டங்களின் விற்பனைக்கென செய்யப்பட்ட எங்களது விளம்பரங்களுக்கு—

(i) அப்போதைக்கு வலுவிலிருப்பதான ஏதேனும் சட்டத்தால் சொந்தக்காரரின் பெயரில், பண்டங்கள் பதிவுசெய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தில், பண்டங்கள் சொந்தக்காரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு முப்பது நாட்களுக்குள் ; அல்லது

(ii) வேறேதேனும் விடயத்தில், மீள உடைமைகொள்ளும் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்,

அத்தகைய விளம்பரம் வெளியிடப்பட்டு, அதற்கு மறுகையாக பண்டங்களுக்கென சொந்தக்காரருக்குக் கொடைமுனையப்பட்ட அதி உயர்ந்த விலையாதல் வேண்டும் ; அல்லது

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்கு வாடகையாளர் உடன்படாத ஏதேனும் விடயத்தில்—

(i) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக பண்டங்களின் பெறுமதியை எந்த ஆள் தீர்மானித்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கப்பட்டாரோ அந்த ஆளினல் ; அல்லது

(ii) ஆளெவரும் அவ்வாறு குறித்துரைக்கப்படாதிருப்பின், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைக்கான எல்லாத் திறத்தவர்களாலும் உடன்பட்டுப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவரினல் ; அல்லது

(iii) அத்தகைய நியமனத்துக்கு அத்தகைய திறத்தவர்கள் உடன்பட முடியாதுவிடின், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைக்கான எவரேனுமொரு திறத்தவரின் விண்ணப்பத்தின்மேல் நீதிமன்றத்தினல் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஓர் ஆளினல்,

தீர்மானிக்கப்படும் பண்டங்களின் பெறுமதியாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறுயினும், (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விலை வாடகையாளரினல் நிராகரிக்கப்பட்டு பதினைந்து நாட்களுக்குள் அதற்கான விண்ணப்பம் செய்யப்பட்டாலன்றி (iii) என்னும் உபபந்தியின்கீழ் நீதிமன்றம் பெயர் குறித்த நியமனமொன்றைச் செய்தலாகாது.

வாடகையாளர் பண்டங்களை மோசடியாக விற்றல் அல்லது கையுதிர்த்தல்.

17. வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றில் கொண்டுள்ளவையான எவையேனும் பண்டங்களை கையுதிர்ப்பதினால் அல்லது விற்பதினால் அல்லது பண்டங்களை அகற்றுவதினால் அல்லது வேறு ஏதேனும் வகையாக சொந்தக்காரரை மோசடி செய்பவரான அல்லது மோசடி செய்ய எத்தனிப்பவரான ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

### சொந்தக்காரரின் உரிமைகளும் கடப்பாடுகளும்

வாடகைக் கொடுப்பனவைச் செலுத்தத் தவறியதற்காக அல்லது அதிகாரமில்லாத செயலுக்காக அல்லது வெளிப்படையான நிபந்தனையினை மீறியதற்காக வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையினை முடிவுறுத்துதற்கான சொந்தக்காரரின் உரிமை.

18. (1) வாடகையாளர் ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக வாடகையினைச் செலுத்துவதில் ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகையினைச் செய்யுமிடத்து அப்போது, 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும்—

(அ) வாடகையானது, வாராவாரம் அல்லது அதற்குக் குறைவான இடைவேளைகளில் செலுத்தப்படற்பாலதாக உள்ளவிடத்து, ஒரு வாரத்திற்குக் குறையாத ; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் விடயத்தில் இரண்டு வாரங்களுக்குக் குறையாத,

எழுத்திலான அறிவித்தலை வாடகையாளருக்குக் கொடுத்ததன் பின்வரும், சொந்தக்காரரானவர், வாடகையாளருக்கு முடிவுறுத்தல் பற்றிய எழுத்திலான அறிவித்தலைக் கொடுப்பதன் மூலம் உடன்படிக்கையினை முடிவுறுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின், வாடகையாளர், சொந்தக்காரருக்கு நிலுவையாக உள்ள வாடகையினை உடன்படிக்கையின் நியதிகளின்கீழ் செலுத்தப்படற்பாலதாகக்கூடியதான அதன் மேலான அத்தகைய வட்டியுடன் சேர்த்து, விடயத்துக்கேற்றவாறு, சொல்லப்பட்ட ஒரு வார அல்லது இரண்டு வாரங்கள் கொண்ட காலப்பகுதி கழிவதன் முன்னர் செலுத்தினால் அல்லது செலுத்த முன்வந்தால் சொந்தக்காரரானவர், உடன்படிக்கையினை முடிவுறுத்துவதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) ஒரு வாடகையாளர்—

(அ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்புறுத்துவதான பண்டங்கள் தொடர்பில், உடன்படிக்கையின் நியதிகளுள் எவற்றிற்கும் ஒவ்வாததான ஏதேனும் செயலைச் செய்தால் ; அல்லது

(ஆ) நிபந்தனையை மீறுவதன்மேல் சொந்தக்காரரானவர் உடன்படிக்கையினை முடிவுறுத்தலாம் என ஏற்பாடு செய்துள்ளதான உடன்படிக்கையின் வெளிப்படையான நிபந்தனை எதனையும் மீறினால்,

சொந்தக்காரரானவர், உடன்படிக்கையினை முடிவுறுத்துவதற்கு அவரை உரித்துடையவராக்குவதான குறிப்பான மீறுகையினை அல்லது செயலினை குறித்துரைத்து முப்பது நாட்களுக்குக் குறையாததான எழுத்திலான அறிவித்தலை வாடகையாளருக்குக் கொடுப்பதன் மூலம் உடன்படிக்கையினை முடிவுறுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் விடயத்தில் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான மீறுகை அல்லது செயல் வாடகையாளரால் நிவர்த்தி செய்யப்படக்கூடியவிடத்து, சொல்லப்பட்ட முப்பது நாட் காலப்பகுதி கழிவதற்கு முன்னர், அத்தகைய வாடகையாளரை முறைப்பாடு செய்யப்பட்டதான மீறுகையினை அல்லது செயலினை நிவர்த்திசெய்யுமாறு அறிவித்தல் மூலமாக தேவைப்படுத்துவது சொந்தக்காரரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட முப்பது நாட் காலப்பகுதி கழிவதற்கு முன்னர், முறைப்பாடு செய்யப்பட்டதான மீறுகையினை அல்லது செயலினை வாடகையாளர் நிவர்த்திசெய்தால், சொந்தக்காரர் உடன்படிக்கையை முடிவுறுத்த உரித்துடையவராதலாகாது.

**முடிவுறுத்துகையின் மேல் சொந்தக்காரரின் உரிமைகள்.**

19. இச்சட்டத்தின்கீழ் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்று முடிவுறுத்தப்படுமிடத்து அப்போது, சொந்தக்காரரானவர்—

(அ) முன்னரே செலுத்தப்பட்டதான வாடகையினையும் ஆரம்ப வைப்புப் பணத்தினையும் வைத்துக்கொள்வதற்கும், செலுத்துமதியாக உள்ளதான வாடகை நிலுவைகளை அறவிடுதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய பண்டங்கள் சொந்தக்காரரால் மீள உடைமைகொள்ளப்படும்போது வாடகையினையும் ஆரம்ப வைப்புப் பணத்தினையும் வைத்திருப்பதும் செலுத்துமதியாக உள்ளதான வாடகை நிலுவைகளை அறவிடுவதும் 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைந்தனவாக இருத்தல் வேண்டும்;

(ஆ) 16 ஆம் பிரிவினதும், 21 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அத்துடன், முரணுகவுள்ளதான ஒப்பந்தம் எதற்கும் அமைவாகவும் பண்டங்களை மீள் உடைமை கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்;

(இ) 20 ஆம் பிரிவினதும், 21 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நீதிமன்றத்தில் வழக்கின் மூலமாக பண்டங்களின் மீள் உடைமையைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராதல் வேண்டும்;

(ஈ) பதின்மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும், 14 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, முடிவுறுத்துகையானது, எத்தேதி முதல் பயனுடையதாகுமோ அத்தேதியிலிருந்து பண்டங்கள் சொந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்டதான அல்லது சொந்தக்காரரால் மீள் உடைமை கொள்ளப்பட்டதான தேதி வரையில், பண்டங்களை ஒப்படைக்காததற்கான சேத ஈடுகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**பண்டங்களை நீதிமன்றத்தின் மூலமாகவல்லாது மீள் உடைமை கொள்வதற்கான சொந்தக்காரரின் உரிமை மீதான மட்டுப்பாடு.**

20. (1) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றின்கீழ் பண்டங்கள் வாடகைக்கு விடப்படுமிடத்தும், அல்லது விற்கப்படுவதற்கு உடன்பட்டுக் கொள்ளப்படுமிடத்தும், அத்துடன், ஒப்பந்தமானது சட்டமுறையாக முடிவுறுத்தப்படுவதன் முன்னர் வாடகையாளரால் அல்லது அவர் சார்பில் அல்லது எவரேனும் உத்தரவாதமளிப்பவரால் அல்லது அவர் சார்பில் (தீர்ப்பொன்றினைப் பின்பற்றியோ அல்லது வேறுவகையாகவோ) வாடகைக் கொள்வனவு விலையின் எழுபத்தைந்து சதவீத

மானது செலுத்தப்பட்டிருக்குமிடத்தும் அல்லது செலுத்த முன்வரப் பட்டிருக்குமிடத்தும், சொந்தக்காரரானவர், வழக்கு மூலமாகவன்றி வாடகையாளரிடமிருந்து பண்டங்களை மீள உடைமை கொள்வதற்கான உரிமை எதனையும் வலியுறுத்துதலாகாது :

ஆயின், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் முரணானது எது எவ்வாறிருப்பினும், சொந்தக்காரரானவர் , இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு இணங்க உடன்படிக்கையினை தக்கவாறு முடிவுறுத்தியிருந்தா லன்றி, பண்டங்களை வாடகையாளரிடமிருந்து மீள் உடைமையைக் கொள் வதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) சொந்தக்காரரானவர், முற்போந்த உட்பிரிவுக்கு முரணுக பண் டங்களை மீளப்பெற்றுக்கொண்டால், வாடகைக் கொள்வனவு உடன்படிக் கையானது, முன்னரே முடிவுறுத்தப்படாதிருந்தால், முடிவுறுதல் வேண் டும் என்பதுடன்,—

(அ) வாடகையாளர் உடன்படிக்கையின் கீழான எல்லாப் பொறுப்புக் களிலிருந்தும் விடுவிக்கப்படுதலும் வேண்டும்; அத் துடன் சொந்தக்காரரிடமிருந்து, உடன்படிக்கையின்கீழ் அல் லது உடன்படிக்கை தொடர்பாக அவரால் கொடுக்கப்பட்டதான பிணை எதனதும்கீழ் அவரால் செலுத்தப்பட்டதான எல்லாத் தொகைகளையும் வழக்கொன்றில், அறவிட்டுக்கொள்வதற்கு உரித் துடையவரானதாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எவரேனும் உத்தரவாதமளிப்பவர், உத்தரவாத ஒப்பந்தத்தின்கீழ் அல்லது அவ்வொப்பந்தம் தொடர்பாக அவரால் கொடுக்கப் பட்டதான பிணை எதனதும் கீழ் அவரால் செலுத்தப்பட்டதான எல்லாத் தொகைகளையும் சொந்தக்காரரிடமிருந்து, வழக் கொன்றில் அறவிட்டுக் கொள்வதற்கு உரித்துடையவரானதா தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளானவை வாடகையாளர் அவ ருக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் உரிமையின் பயனுக உடன்படிக்கை யினை முடிவுறுத்தியதான ஏதேனும் விடயத்திற்கு ஏற்புடைத்தானதல் லாத ஒன்றுதல் வேண்டும்.

*பண்டங்களை மீளப் பெறு வதற்கான வழக்குகளில் நீதிமன்றத்தின் தத்துவங்கள்.*

21. (1) இருபதாம் பிரிவு ஏற்புடைத்தாவதான ஏதேனும் விட யத்தில் வாடகைக் கொள்வனவு விலையின் எழுபத்தைந்து சதவீதமானது முன்னர் சொல்லப்பட்டவாருக செலுத்தப்பட்ட அல்லது கொடுக்கமுன் வரப்பட்ட பின்னர் வாடகையாளர் ஒருவரிடமிருந்து பண்டங்களை மீள உடைமை கொள்வதற்கான உரிமை ஒன்றினை வலியுறுத்துவதற்கெனச் சொந்தக்காரர் வழக்கொன்றினைத் தொடங்குமிடத்து, சொந்தக்காரரான வர், வழக்கில் தொகையினைக் கோருவதல்லாது, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளின்கீழ் அல்லது உடன்படிக்கை தொடர்பான உத்தர வாத ஒப்பந்தம் எதனதும் கீழ் ஏதேனும் செலுத்துமதியாக உள்ளதான கொடுப்பனவை வலியுறுத்துவதற்கு நடபடியெதனையும் மேற்கொள்ளுத லாகாது.

(2) உடன்படிக்கைக்கான கட்சிக்காரர்கள் எல்லோரும், அத்துடன் எவரேனும் உத்தரவாதமளிப்பவரும் வழக்குக்கான கட்சிக்காரர்களாக ஆக்கப்படுதல் வேண்டும்.

(3) வழக்கு விசாரணை முடிவுறுதிருக்கையில், நீதிமன்றமானது வேறு ஏதேனும் தத்துவங்களுக்கு மேலதிகமாக, சொந்தக்காரரின் விண்ணப்பத் தின்மேல், பண்டங்களைப் பயன்படுத்துவதனை மட்டுப்படுத்துவதான அல்லது தடை செய்வதான அல்லது அவற்றின் கட்டுக்காவல் பற்றிய பணிப் புகளை வழங்குவதான கட்டளைகள் உட்பட, சேதங்கள் அல்லது தேய் மானங்களிலிருந்து பண்டங்களைப் பாதுகாக்கும் நோக்கத்திற்கு நியாய மானதென நீதிமன்றம் கருதுவதான அத்தகைய கட்டளைகளை ஆக்குதற் கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) வழக்கினைக் கேட்பதன்மீது, நீதிமன்றமானது, வேறு ஏதேனும் தத்துவங்களுக்குப் பங்கமின்றி,—

(அ) சொந்தக்காரருக்கு எல்லாப் பண்டங்களினதும் குறிப்பான ஒப் படைப்புக்கான கட்டளை ஒன்றினை ஆக்கலாம்; அல்லது

(ஆ) சொந்தக்காரருக்கு எல்லாப் பண்டங்களினதும் குறிப்பான ஒப் படைப்புக்கான கட்டளை ஒன்றினை ஆக்கலாம் என்பதுடன்—

(i) வாடகையாளர் அல்லது உத்தரவாதமளிப்பவர், வாடகைக் கொள்வனவு விலையின் செலுத்தப்படாத மீதியினை, நீதி மன்றமானது வாடகையாளரின் அல்லது உத்தரவாத மளிப்பவரின் வருவாயையும் இயைபானதான வேறு எவையேனும் சந்தருப்பங்களையும் கருத்திற்கொண்டு, நியாயமானதெனக் கருதுவதான அத்தகைய காலங்களி லும் அத்தகைய தொகைகளாகவும் செலுத்துதல் வேண் டும் என்ற நிபந்தனையின் மேல், அத்துடன்

(ii) நீதிமன்றமானது நியாயமானதெனக் கருதுவதான அத் தகைய வேறு நிபந்தனைகளை வாடகையாளர் அல்லது ஓர் உத்தரவாதமளிப்பவர் பூர்த்தி செய்வதற்கு அமை வாக,

கட்டளையின் செயற்பாட்டைத் தள்ளிப் போடலாம்; அல்லது

(இ) சொந்தக்காரருக்கு, பண்டங்களின் ஒரு பாகத்தின் குறிப்பான ஒப்படைப்புக்கும் பண்டங்களின் மீதிக்கான சொந்தக்காரரின் உரித்தினை வாடகையாளருக்கு கைமாற்றுவதற்கும் என கட்டளை ஒன்றினை ஆக்கலாம்.

(5) நீதிமன்றமானது, வாடகையாளர் வாடகைக் கொள்வனவு விலை தொடர்பாக செலுத்தியதான தொகை, பண்டங்களின் ஒரு பாகத்தின் [(8) ஆம் உட்பிரிவிற்கு இணங்கத் தீர்மானிக்கப்பட்ட] விலையை வாட கைக் கொள்வனவு விலையில் செலுத்தப்படாதுள்ள மீதியின் ஆகக் குறைந்தது எழுபத்தைந்து வீதத்தால் விஞ்சுவதாக உள்ளது எனத் திருப்திப்பட்டாலன்றி, பண்டங்களின் அப்பாகத்திற்கான சொந்தக்கார ரின் உரித்தினை வாடகையாளருக்குக் கைமாற்றுவதான கட்டளை ஒன்றினை அது ஆக்குதலாகாது.

(6) வழக்கு நடவடிக்கைகளில் சொந்தக்காரருக்கு எதிராக சேதஈடு கள் தீர்த்தளிக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றமானது, உள்ளபடியாகச் செலுத்தப்பட்டதான தொகைக்கு மேலதிகமாக, சேதஈடுகளின் தொகை யினையும் அல்லது நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுவதான அதன்

அத்தகைய பாகத்தினை, வாடகைக் கொள்வனவு விலை தொடர்பாக செலுத்தியுள்ளாரென வாடகையாளரைக் கருதலாம் என்பதுடன், அதன் மேல் சேதஈடுகளானவை முழுமையாக அல்லது பகுதியளவில் அதற்கிணங்க அனுப்பப்படுதலும் வேண்டும்.

(7) இப்பிரிவிலும், இச்சட்டத்தின் வேறு இடங்களிலும் "எவையேனும் பண்டங்களின் குறிப்பான ஒப்படைப்புக்கான கட்டளை" என்பது, வாடகையாளருக்கு பண்டங்களின் பெறுமதியினைச் செலுத்துவதற்கான ஒரு விருப்பத்தேர்வினை வழங்காது பண்டங்களை சொந்தக்காரரிடம் ஒப்படைப்பதற்கான கட்டளை ஒன்று எனப் பொருளாகும்.

(8) இப்பிரிவில், எவையேனும் பண்டங்கள் தொடர்பில் "விலை" என்பது, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் குறிப்பினால் அல்லது திருபத்தினால் அப்பண்டங்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டதான வாடகைக் கொள்வனவு விலையின் அத்தகைய பாகம் அல்லது அத்தகைய குறித்தொதுக்குகை எதுவும் செய்யப்படாதிருந்தால், நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியதான வாடகைக் கொள்வனவு விலையின் அத்தகைய பாகம் எனப் பொருளாகும்.

(9) இப்பிரிவு ஏற்புடைத்தாவதான வழக்கொன்று கேட்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலாயினும், சொந்தக்காரரானவர் பண்டங்களின் ஒரு பாகத்தின் உடைமையினை மீட்டுக் கொள்வாராயின், (4) ஆம் உட்பிரிவிலுள்ள எல்லாப் பண்டங்களும் பற்றிய குறிப்பீடானது, சொந்தக்காரரானவர் மீட்டுக் கொள்ளாததான எல்லாப் பண்டங்களுக்குமான குறிப்பீடு எனப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், கட்சிக்காரர்கள், அவ்வாறு மீட்டுக்கொள்ளப்பட்ட பண்டங்கள் தொடர்பான வாடகைக் கொள்வனவு விலையின் சிராக்குதல் ஒன்று பற்றி உடன்பட்டுக் கொள்ளாதிருந்தால், நீதிமன்றமானது, அவ்வுட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளின் நோக்கங்களுக்காக வாடகைக் கொள்வனவு விலையினதும் செலுத்தப்படாதுள்ள மீதியினதும் அத்தகைய நீதிமன்றம் நியாயமானதெனக் கருதுவதான குறைப்புக்களைச் செய்யலாம்.

(10) சொந்தக்காரரானவர், ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கு விடப்பட்ட பண்டங்களின் ஒரு பாகத்தினை மீட்டுக்கொள்ளுமிடத்து அத்துடன், அம்மீட்டுக்கொள்ளுகை 20 ஆம் பிரிவிற்கு முரணாகச் செய்யப்படுமிடத்து, இப்பிரிவின் ஏற்பாடுகள் சொந்தக்காரரால் பண்டங்களின் மீதியினை மீட்டுக் கொள்வதற்கான எவ்வழக்குத் தொடர்பாகவும் ஏற்புடையனவாதலாகாது.

ஒரே கட்சிக்காரர்களுக்கு இடையே அடுத்துறுவதான வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளுக்கு 20 ஆம், 21 ஆம் பிரிவுகளின் ஏற்புடை

22. வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின்கீழ் பண்டங்கள் வாடகைக்கு விடப்பட்டு, வாடகைக் கொள்வனவு விலையின் எழுபத்தைந்து சதவீதம் செலுத்தப்பட்ட அல்லது செலுத்த முன்வரப்பட்ட பின்னர் எந்நேரத்திலாயினும், சொந்தக்காரரானவர் வாடகையாளருடன் அப்பண்டங்களைக் கொண்டுள்ளதான மேற்கொண்டு ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையினைச் செய்துகொள்ளுமிடத்து, 20 ஆம், 21 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், மேற்கொண்ட உடன்படிக்கை தொடர்பாக அது தொடங்கும் காலத்திலிருந்து பயனுறுவதாதல் வேண்டும்.

பண்டங்களை ஒப்படைக்கும் கட்டளையினை இடைநிறுத்தவதன் பயன்.

23. (1) சொந்தக்காரருக்கு பண்டங்களின் குறிப்பான ஒப்படைப்புக்கான கட்டளையின் செயற்பாடு 21 ஆம் பிரிவின்கீழ் பிற்போடப்பட்டுள்ள போது, வாடகையாளர் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் நியதிகளின்கீழும் அவற்றின்மீதும் பண்டங்களை உடைமையில் கொண்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின்—

(அ) வாடகையாளரால் அல்லது உத்தரவாதமளிப்பவர் ஒருவரால், வாடகைக் கொள்வனவு விலையின் செலுத்தப்படாதுள்ளதான மீதியின் காரணமாக, கட்டளையின் நியதிகளுக்கு இணங்கவன்றி, மேற்கொண்டு தொகை எதுவும் செலுத்தப்படற்பாலதாகாது அல்லது செலுத்தப்படற்பாலதாக வருதலாகாது ; அத்துடன்

(ஆ) நீதிமன்றமானது, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் நியதிகளுக்கும், அது தொடர்பான உத்தரவாத ஒப்பந்தத்தின் நியதிகளுக்கும், கொடுப்பனவு நியதிகளிலுள்ள வேறுபாடுகளைக் கருத்திற்கொண்டு நீதிமன்றம் அவசியமானதெனக் கருதுவதான அத்தகைய மேலதிக திரிபுகளைச் செய்யலாம்.

(2) சொந்தக்காரருக்குப் பண்டங்களின் குறிப்பான ஒப்படைப்புக்கான கட்டளையின் செயற்பாடு 21 ஆம் பிரிவின்கீழ் பிற்போடப்பட்டுள்ளபோது வாடகையாளர் அல்லது ஓர் உத்தரவாதமளிப்பவர்—

(அ) பிற்போடுவதன் நிபந்தனை எதற்கும் அல்லது நீதிமன்றத்தால் வேறுபடுத்தப்பட்டவாறான உடன்படிக்கையின் நியதி எதற்கும் இணங்கியொழுகத் தவறினால் ; அல்லது

(ஆ) பண்டங்களை முறைகேடாகக் கையுதிர்த்தால்,

சொந்தக்காரரானவர், எந்த நீதிமன்றத்தில் கட்டளை பிறப்பிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றினைச் செய்வதல்லாது வேறுவகையாக, வாடகையாளருக்கு அல்லது உத்தரவாதமளிப்பவருக்கு எதிராக, தவறுகை அல்லது கையுதிர்த்தல் தொடர்பாக குடியியல் வழக்கு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளுதலாகாது :

ஆயின், வாடகைக் கொள்வனவு விலையின் செலுத்தப்படாதுள்ளதான மீதியைச் செலுத்துதல் தொடர்பான நிபந்தனை எதனதும் மீறுகையின் விடயத்தில், நீதிமன்றம் அவ்வாறு பணித்திருந்தாலன்றி, கட்டளையினை நிறைவேற்றுவதற்கான அனுமதிக்கென நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டியது சொந்தக்காரருக்கு அவசியமானதாதலாகாது.

(3) வாடகைக் கொள்வனவு விலையின் செலுத்தப்படாதுள்ளதான மீதி, கட்டளையின் நியதிகளுக்கு இணங்கச் செலுத்தப்பட்டபோது, பண்டங்களிலுள்ள சொந்தக்காரரின் உரித்தானது வாடகையாளருக்கு உரித்தாவதாதல் வேண்டும்.

(4) நீதிமன்றமானது கட்டளை ஒன்றின் செயற்பாடு, 21 ஆம் பிரிவின் கீழ் பிற்போடப்பட்டுள்ள எந்நேரத்திலாயினும்—

(அ) பிற்போடுவதன் நிபந்தனைகளை வேறாக்கலாம் என்பதுடன், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைக்கும் அது தொடர்பான ஏதேனும் உத்தரவாத ஒப்பந்தத்துக்கும், பிற்போடுதல் நிபந்தனைகளின் வேறுபடுத்துகைகளைக் கருத்திற்கொண்டு நீதிமன்றம் அவசியமானதெனக் கருதுவதான அத்தகைய மேலதிக திரிபுகளையும் செய்யலாம்;

(ஆ) பிற்போடுதலை ஒழிக்கலாம்;

(இ) சொந்தக்காரருக்கு பண்டங்களின் ஒருபாகத்தின் குறிப்பான ஒப்படைப்புக்கும் வாடகையாளருக்கு பண்டங்களின் மீதிமீதுள்ள சொந்தக்காரரின் உரித்தினை கைமாற்றுவதற்கும் என 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, கட்டளையினை ஆக்கலாம்.

(5) இருபத்தோராம் பிரிவு ஏற்புடைத்தாகின்ற ஏதேனும் வழக்கில், அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான கட்டளை ஒன்றன் செயற்பாட்டைப் பின்போடுவதற்கான நிபந்தனைகள் பற்றிய முனைவொன்று வாடகையாளரினால் செய்யப்பட்டு நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் சொந்தக்காரரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அப்பந்தியின் கீழான கட்டளையொன்று, அப்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றிய சான்றைக் கேட்காமல் சொல்லப்பட்ட முனைவுக்கிணங்க அதன்மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்படலாம்:

ஆயின், உத்தரவாதமளிப்பவர் ஒருவர் வழக்குக்கான கட்சிக்காரர் ஒருவராக இருக்கின்றவிடத்து, அவ்வழக்கின் கேட்பக்கென நிருணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னராக அத்தகைய கட்டளை எதுவும் ஆக்கப்படுதல் ஆகாது.

*பிரதிகளையும் தகவலையும் வழங்குவதற்கு சொந்தக்காரருக்குள்ள கடப்பாடு.*

24. (1) உத்தரவாத ஒப்பந்தம் ஒன்று இருக்கின்றவிடத்து, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் உண்மைப் பிரதியொன்று, சொந்தக்காரரால் ஒப்பமிடப்பட்டு, உடன்படிக்கையின்கீழ் இறுதிக் கொடுப்பனவு செய்யப்படுவதன் முன்னர் எந்நேரத்திலாயினும் கோரிக்கையின் மீது உத்தரவாதமளிப்பவருக்கு செலவறவிடப்படாமல் வழங்கப்படுதல் சொந்தக்காரரின் கடமையாதல் வேண்டும்.

(2) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் இறுதிக் கொடுப்பனவு செய்யப்படுவதன்முன்னர் எந்நேரத்திலாயினும் வாடகையாளரிடமிருந்து சொந்தக்காரர் அதற்கென எழுத்திலான வேண்டுகோள் ஒன்றினைப் பெற்றுக்கொண்ட பின்னரும், அத்துடன் செலவுகளுக்கென வாடகையாளர் சொந்தக்காரருக்கு ஒரு ரூபாத் தொகையினைக் கொடுக்க முன்வந்தபின்னரும் பதினான்கு நாட்களுக்குள்ளாக—

(அ) வாடகையாளரால் அல்லது அவரது சார்பில் செலுத்தப்பட்ட

(ஆ) உடன்படிக்கையின்கீழ் செலுத்துமதியாக வந்துள்ளதும் ஆனால் செலுத்தப்படாதிருப்பதுமான தொகையினையும், ஒவ்வொரு செலுத்தப்படாத தவணைக் கட்டுப்பணமும் செல்லுமதியாக வந்துள்ள தேதி, அத்துடன் ஒவ்வொரு தவணைக் கட்டுப்பணத்தின் தொகையினையும்; அத்துடன்

(இ) உடன்படிக்கையின்கீழ் செலுத்துமதியாக வரவிருப்பதான தொகையினையும், அத்தகைய எதிர்காலத் தவணைக் கட்டுப்பணம் ஒவ்வொன்றும் செலுத்தற்படற்பாலதாக வரும் தேதி அல்லது அத்தேதியைத் தீர்மானிக்கும் முறை அத்துடன், அத்தகைய ஒவ்வொரு தவணைக் கட்டுப்பணத்தின் தொகையினையும்,

காட்டுவதான, சொந்தக்காரரினால் அல்லது அவரின் முகவரினால் ஒப்பமிடப்பட்டதான கூற்றொன்றினை வாடகையாளருக்கு வழங்குதலும் சொந்தக்காரரின் கடமையாதல் வேண்டும்.

**(3) நியாயமான காரணமின்றி (1) ஆம் உட்பிரிவினால் அல்லது (2) ஆம் உட்பிரிவினால் சுமத்தப்பட்டதான கடமைகளை நிறைவேற்றுவதில் தவறுகையொன்றுள்ளவிடத்து, அப்போது, அத்தவறுகை தொடரும் போது—**

(அ) சொந்தக்காரரானவர், வாடகையாளருக்கு எதிராக உடன்படிக்கையினை வலியுறுத்துவதற்கு அல்லது உடன்படிக்கை தொடர்பான உத்தரவாத ஒப்பந்தம் எதனையும் வலியுறுத்துவதற்கு அல்லது வாடகையாளரிடமிருந்து பண்டங்களை மீட்டுக்கொள்வதற்கான உரிமை எதனையும் வலியுறுத்துவதற்கு உரித்துடையவராதலாகாது; அத்துடன்

(ஆ) உடன்படிக்கையின்கீழ் செலுத்தப்படற்பாலதான பணம் தொடர்பாக வாடகையாளரால் கொடுக்கப்பட்ட அல்லது முன்னர் சொல்லப்பட்டவாறான அத்தகைய உத்தரவாத ஒப்பந்தம் ஒன்றன்கீழ் செலுத்தப்படற்பாலதான பணம் தொடர்பாக உத்தரவாதமளிப்பவரால் கொடுக்கப்பட்ட பிணைப்பொறுப்பு எதுவும், அதனை வைத்திருப்பவர் எவரினாலும் வாடகையாளருக்கு அல்லது உத்தரவாதமளிப்பவருக்கு எதிராக வலியுறுத்தப்படுதலாகாது,

என்பதுடன், தவறுகையானது, இரண்டு மாத காலப்பகுதி ஒன்றுக்கு தொடருமானால், சொந்தக்காரரானவர், இருநூறு ரூபா வரையானதான குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படற்பாலராதலும் வேண்டும்.

(4) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைக்கு உட்பட்டவையான பண்டங்கள் எந்த விதிப்பனவிற்கு அல்லது வில்லங்கத்திற்கு அமைந்ததாக உள்ளனவோ ஏதேனும் அந்த விதிப்பனவினை அல்லது வில்லங்கத்தினை, சொந்தக்காரருக்கு அல்லது வாடகையாளருக்கு அல்லது சொந்தக்காரர், வாடகையாளர் ஆகிய இருவருக்கும் எதிராக வலியுறுத்துவதற்குள்ள மூன்றும் கட்சிக்காரர் ஒருவருக்குள்ள உரிமை எதனையும் பாதிப்பதாக (3) ஆம் உட்பிரிவிலுள்ள எதுவும் பொருள்கொள்ளப்படுதலாகாது.

பணக்கொடுப்பனவாகவல்லாத வேறுவகையாக விலையினைக் கொடுத்துத் தீர்த்தல்.

25. வாடகைக் கொள்வனவு விலையின் ஏதேனும் பாகமானது பணக் கொடுப்பனவாகவல்லாது வேறுவகையாகக் கொடுத்துத்தீர்க்கப்படலாம் எனச் சொந்தக்காரர் ஒருவர் இணங்கியுள்ளவிடத்து, அத்தகைய ஏதேனும் கொடுத்துத் தீர்த்தலானது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, வாடகைக் கொள்வனவு விலையின் அப்பாகத்தின் கொடுப்பனவொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

வாடகையாளர் இன்றேரின் கடனிறுக்க வகையறவு.

26. (1) ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்ந்திருக்கையில், வாடகையாளர், அப்போதைக்கு வலுவிலுள்ளதான கடனிறுக்க வகையறவு தொடர்பான ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, சாட்டுணியானவர், உடன்படிக்கையின்கீழ் வாடகையாளரின் உடைமையில் இருப்பவையான பண்டங்கள் தொடர்பாக வாடகையாளர் அதன் தொடர்பாகக் கொண்டுள்ளதான அதே உரிமைகளையும் கடப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சாட்டுணி மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியுடன் உடன்படிக்கையின்கீழான வாடகையாளரின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் வேறு எவரேனும் ஆளுக்குச் சாட்டுதல் செய்யலாம் என்பதுடன், சாட்டுணி உடன்படிக்கையின்கீழ் வாடகையாளருக்குள்ள எல்லா உரிமைகளையும் கொண்டிருத்தலும் எல்லாக் கடப்பாடுகளுக்கும் அமைந்தவராக இருத்தலும் வேண்டும்.

பண்டங்களின் உடைமையை மீளப்பெற்றுக் கொள்வதற்கான வழக்கில் அல்லது விண்ணப்பத்தில் பாதகமான தடுத்துவைப்புப் பற்றிய சான்று.

27. வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றின்கீழ் வாடகைக்கு விடப்பட்டவையான பண்டங்களின் சொந்தக்காரர் ஒருவரினால், வாடகையாளரிடமிருந்து பண்டங்களின் உடைமையை மீளப்பெறுவதற்கான உரிமை ஒன்றினை வலியுறுத்துவதான வழக்கு அல்லது விண்ணப்பம் ஒன்றில் சொந்தக்காரரானவர், வழக்கு அல்லது விண்ணப்பம் தொடங்குவதற்கு முன்னரும் பண்டங்களின் உடைமையை மீளப்பெறுவதற்கான உரிமை வந்துற்ற பின்னரும் சொந்தக்காரரானவர், பண்டங்களை ஒப்படைக்குமாறு வாடகையாளருக்கு எழுத்தில் வேண்டுகோள் விடுத்தாரென எண்பிக்குமிடத்து, வாடகையாளரது பண்டங்களின்மீதான உடைமை, அதன் உடைமையை மீளப் பெற்றுக்கொள்வதற்குரிய சொந்தக்காரரின் கோரிக்கையின் நோக்கத்துக்கென, சட்டமுறையற்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.

அறிவித்தல் முதலியவற்றைச் சேர்ப்பித்தல்.

28. (1) இச்சட்டத்தின்கீழ் சொந்தக்காரர் அல்லது வாடகையாளர் அல்லது உத்தரவாதமளிப்பவர் ஒருவருக்கு சேர்ப்பிக்குமாறு அல்லது கொடுக்குமாறு அல்லது அனுப்புமாறு தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அறிவித்தல் அல்லது ஆவணம் எதுவும்—

(அ) அவருக்கு நேரில் ஒப்படைப்பதன் மூலம்;

(ஆ) கடைசியாக அறிந்துள்ளதான வதிவு அல்லது வியாபார இடத்திற்கு முகவரியிட்டெழுதப்பட்டதாய், பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைப்பதன்மூலம்; அல்லது

(இ) கடைசியாக அறிந்துள்ளதான வதிவு அல்லது வியாபார இடத்திற்கு முகவரியிட்டெழுதப்பட்டதாய், தபாலிடுதற் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக்கொண்டு சாதாரண தபால் மூலம் அனுப்பப்படுவதன் மூலம்,

அவ்வாறு சேர்ப்பிக்கப்படலாம், அல்லது கொடுக்கப்படலாம் அல்லது அனுப்பிவைக்கப்படலாம்.

(2) ஏதேனும் அறிவித்தல் அல்லது ஆவணம் சேர்ப்பிக்கப்படுமாறு அல்லது கொடுக்கப்படுமாறு அல்லது அனுப்பிவைக்கப்படுமாறு தேவைப்படுத்தப்பட்டவரான அல்லது அதிகாரமளிக்கப்பட்டவரான ஆள் ஒருவர் கூட்டுத்தாபனமொன்ருக, சபை ஒன்ருக, பகிரங்க குழு ஒன்ருக அல்லது கம்பெனி ஒன்ருக இருக்குமிடத்து, அத்தகைய அறிவித்தல் அல்லது ஆவணம், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுக்களுக்கு அழைப்பாணைகள் சேர்ப்பிக்கப்படுவதற்கென குடியியல் நடைமுறைச் சட்டக்கோவையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான முறையில் சேர்ப்பிக்கப்படலாம்.

29. வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றிலுள்ள பின்வரும் ஏற்பாடுகள் வறிதானதாதல் வேண்டும், அதாவது எந்த ஏற்பாட்டினுல்— ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் குறித்த சில ஏற்பாடுகளை தவிர்த்தல்.

(அ) சொந்தக்காரர் ஒருவர் அல்லது அவர் சார்பில் செயற்படுபவரான ஆள் ஒருவர், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றன்கீழ் வாடகைக்கு விடப்பட்டவையான பண்டங்களை உடைமையிற் கொள்ளும் நோக்கங்களுக்கென வாடகையாளர், எங்கே வதிகிருரோ அந்த வளவுகளுக்குள் நுழைவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது ஏதேனும் அத்தகைய நுழைவுக்காக பொறுப்பாக்கப்படுவதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் ஏற்பாடு ; அல்லது

(ஆ) வாடகையாளர் ஒருவர்மீது இச்சட்டத்தினுல் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையினை முடிவுறுத்துவதற்கான உரிமை விலக்கப்பட்டுள்ளதோ அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது வாடகையாளர் ஒருவர்மீது இச்சட்டத்தின்கீழ் அவரால் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையினை முடிவுறுத்தியதன் காரணமாக இச்சட்டத்தினுல் சுமத்தப்பட்டதான பொறுப்புக்கு மேலதிகமாக பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் ஏற்பாடு ; அல்லது

(இ) வாடகையாளர் ஒருவர் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையினை எத்தன்மைத்தான முறையிலும் முடிவுறுத்தியதன்பின்னர், உடன்படிக்கையானது அவரால் இச்சட்டத்தின்கீழ் முடிவுறுத்தப்பட்டிருந்தால் அவர் அமைந்திருந்திருக்கக்கூடியதான பொறுப்பினை விஞ்சுவதான பொறுப்பொன்றுக்கு அமைவதாகுமோ அந்த ஏதேனும் ஏற்பாடு ; அல்லது

(ஈ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றினை அமைத்தருவாக்குதல் அல்லது நிறைவுபடுத்துதல் தொடர்பாக சொந்தக்காரர் ஒருவர் அல்லது விற்பனேயாளர் ஒருவர் சார்பாகச் செயற்படும் எவரேனும் ஆள், வாடகையாளரின் அல்லது வாங்குவோனின் முகவராகக் கணிக்கப்படுகிருரோ அல்லது கருதப்படுகிருரோ அந்த ஏதேனும் ஏற்பாடு ; அல்லது

(உ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றினை அமைத்தருவாக்குதல் அல்லது நிறைவுபடுத்துதல் தொடர்பாக சொந்தக்காரர் ஒருவர் அல்லது விற்பனேயாளர் ஒருவர் அவர்சார்பில் செயலாற்றும் எவரேனும் ஆளின் செயல்களுக்கான அல்லது தவறுகைகளுக்கான பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் ஏற்பாடு ; அல்லது

(ஊ) வாடகையாளர் அல்லது வாங்குவோன், சொந்தக்காரருக்கும், வாடகையாளருக்கும் அல்லது வாங்குவோனுக்கும் இடையேயான பரஸ்பர உடன்படிக்கையினுல் நெரிவுசெய்யப்பட்ட ஆள் ஒருவரல்லாத ஆள் ஒருவரின், காப்புறுதியாளரான அல்லது பழுதுபார்ப்பவரான அல்லது வேறு எத்தன்மைத்திலுமுள்ளதான, சேவைகளேப் பயன்படுத்துமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் ஏற்பாடு.

ஒழுங்குவிதிகள். 30. (1) அமைச்சரானவர், இச்சட்டத்திஞல் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட அதிகாரமளிக்கப்பட்டவையான அல்லது இச்சட்டத்திஞல் விதித்துரைக்கப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டவையான ஏதேனும் கருமம் தொடர்பாக ஒழுங்குவிதிகளே ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதான ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியதான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதான ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் வசதியானவரை விரைவாக பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்திற்கெனக் கொண்டுவரப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாததான ஒழுங்குவிதி எதுவும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆயின், முன்னர் அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமில்லாது நீக்கஞ் செய்யப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதியானது அவ்வாறு நீக்கஞ்செய்யப்பட்டதான தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

31. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினுலன்றி— பொருள் கோடல்.

"நிபந்தனையுடனுன விற்பனை உடன்படிக்கை" என்பது, எப்பண்ட விற்பனை உடன்படிக்கையொன்றன்கீழ்—

(அ) கொள்வனவு விலை அல்லது அதன் பாகம் தவணைக் கட்டுப் பணங்களாகச் செலுத்தப்படற்பாலதோ ; அத்துடன்

(ஆ) பண்டங்களின் சொத்துவம், (வாங்குவோன் பண்டங்களை உடைமையில் வைத்திருப்பதானது எவ்வாறிருப்பினும்) தவணைக்கட்டுப் பணங்களைச் செலுத்துதல் தொடர்பான அல்லது உடன்படிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடிய தான அத்தகைய நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரையில் விற்பவரிடமே இருக்குமோ,

அப்பண்ட விற்பனை உடன்படிக்கை ஒன்றெனப் பொருளாகும்;

"உத்தரவாத ஒப்பந்தம்" என்பது, ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பில் எவ்வொப்பந்தத்தினுல், ஆளொருவர் (அவர் இச்சட்டத்தில் "உத்தரவாதமளிப்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்பட்டவர்) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் வாடகையாளரின் கடப்பாடுகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையேனும் புரிவதனை, உத்தரவாதமளிக்கின்றுரோ அவ்வொப்பந்தம் ஒன்று எனப் பொருளாகும்;

"நீதிமன்றம்" என்பது, "தொடர்ச்சியினை அல்லது வழக்கினை" ஏற்றுக் கவனிப்பதற்கு நியாயாதிக்கமுள்ளதான நீதிமன்றம் எனப் பொருளாகும் ;

"உத்தரவாதமளிப்பவர்" என்பது, வாடகையாளரால் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றன்கீழான அவரின் கடப்பாடுகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையேனும் புரியப்படுவதனை உத்தரவாதமளித்துள்ள ஆள் ஒருவர் எனப்பொருளாகும் ;

"வாடகை" என்பது, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் வாடகையாளரால் பருவம்தோறும் கொடுபடற்பாலதான தொகை எனப் பொருளாகும் ;

"வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை" என்பது, எந்த உடன்படிக்கையின்கீழ் பண்டங்கள் வாடகைக்கு விடப்படும் ஓர் உடன்படிக்கையாகவிருப்பதுடன், அதன்கீழ்—

(அ) பண்டங்களின் சொந்தக்காரரால், ஆள் ஒருவருக்கு, அத்தகைய ஆள் உடன்பட்டுக்கொண்டதான தொகையினை பருவ தவணைக்கட்டுப்பணங்களில் செலுத்துவார் என்ற நிபந்தனையின்மீது பண்டங்களின் உடைமை ஒப்படைக்கப்பட்டும்; அத்துடன்

(ஆ) (i) வாடகையாளர் ஒன்றில் உடன்படிக்கையின் நியதிகளுக்கு இணங்க பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கான விருப்புத்தெரிவினைக் கொண்டும்; அல்லது

(ii) பண்டங்களின் சொத்துவமானது வாடகையாளருக்கு அத்தகைய கடைசித் தவணைக்கட்டுப் பணத்தினைச் செலுத்தியதன்மேல் செல்வதாகவும்,

உள்ளதோ, அந்த ஓர் உடன்படிக்கையாகவிருப்பதுடன், நிபந்தனையுடன்கூடிய விற்பனை உடன்படிக்கை ஒன்றினையும் உள்ளடக்கும்; ஆயின், எந்த உடன்படிக்கையினால், அதில் கொண்டுள்ளதான பண்டங்களின் சொத்துவமானது உடன்படிக்கை செய்த நேரத்தில் அல்லது பண்டங்களை ஒப்படைப்புச் செய்ததன்மேல் அல்லது அதன் முன்னர் எந்நேரத்திலாயினும் சென்றடையுமோ அந்த உடன்படிக்கை எதனையும் உள்ளடக்காது;

"வாடகைக் கொள்வனவு விலை" என்பது, உடன்படிக்கை எப்பண்டங்களைத் தொடர்புறுத்துகின்றதோ அப்பண்டங்களின் கொள்வனவைப் பூர்த்திசெய்வதற்கு அல்லது அப்பண்டங்களின் சொத்துவத்தைக் கொள்வதற்கு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றன்கீழ் வாடகையாளரால் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை எனப் பொருளாவதுடன், வைப்புப்பணமொன்றெனும் வகையாக அல்லது வேறு தொடக்கக் கொடுப்பனவாக வாடகையாளரால் உடன்படிக்கையின்கீழ் செலுத்தப்படற்பாலதான அல்லது எதேனும் அத்தகைய வைப்புப்பணம் அல்லது கொடுப்பனவின் சார்பாக அத்தகைய உடன்படிக்கையின்கீழ் அவருக்கு வரவு வைக்கப்பட்ட அல்லது வரவு வைக்கப்படவுள்ள ஏதேனும் தொகையானது, சொந்தக்காரருக்கு அல்லது வேறெவரேனும் ஆளுக்குச் செலுத்தப்படவிருப்பினுஞ்சரி அல்லது செலுத்தப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது பணக் கொடுப்பனவினால் அல்லது பண்டங்களைக் கைமாற்றுவதன்மூலம் அல்லது ஒப்படைப்பதன்மூலம் அல்லது வேறுவகையாக கொடுத்துத் தீர்க்கப்படவிருப்பினுஞ்சரி அல்லது கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பினுஞ்சரி அத்தொகையையும் உள்ளடக்கும்; ஆனால், உடன்படிக்கை முறிவு ஒன்றுக்கு தண்டமொன்றாக, அல்லது நட்டஈடு ஒன்றாக அல்லது சேதஈடொன்றாக கொடுபடற்பாலதான தொகை எதனையும் உள்ளடக்காது;

"வாடகையாளர்" என்பது, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றன்கீழ் சொந்தக்காரர் ஒருவரிடமிருந்து பண்டங்களின் உடைமையினை பெற்றுக்கொள்ளும் அல்லது பெற்றுக்கொண்ட ஆள் எனப் பொருளாவதோடு, உடன்படிக்கையின்கீழான வாடகையாளரின் உரிமைகள் அல்லது பொறுப்புகள், சாட்டுதலின் மூலமாக அல்லது சட்டச் செயற்பாட்டின் மூலமாக சென்றடைந்தவரான ஆள் ஒருவரையும் உள்ளடக்கும்;

"நிறுவுதல் கட்டணங்கள்" என்பது—

(அ) உடன்படிக்கை எப்பண்டங்களைத் தொடர்புறுத்துகிறதோ அப்பண்டங்களை, அவை எந்த வளவில் பயன்படுத்தப்பட இருக்கின்றனவோ அவ்வளவுகளில் நிறுவுதல் அத்துடன், ஏதேனும் அத்தகைய பண்டங்கள் அதன்கண் பயன்படுத்தப்பட இயலச்செய்வதற்கு வளவுகளை மாற்றியமைத்தல்; அத்துடன்

(ஆ) எவையேனும் அத்தகைய பண்டங்கள், அவை பயன்படுத்தப்பட இருக்கும் வளவுகளில் அமைக்கப்படுதல் அல்லது நிறுவப்படுதல் நியாயமாக அவசியமானதாகுமிடத்து, அத்தகைய அமைப்பு அல்லது நிறுவுகையின் நோக்கத்திற்கென கொண்டுநடாத்தப்பட்ட ஏதேனும் வேலை,

தொடர்பாக சொந்தக்காரரால் உறப்பட்டதான ஏதேனும் செலவுகள் எனப் பொருளாகும்;

"சொந்தக்காரர்" என்பது, வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை யொன்றின்கீழ் பண்டங்களை வாடகைக்கு விடுபவரான, வாடகைக்குக் கொடுப்பவரான அல்லது விற்பதற்கு இணங்கிக்கொள்பவரான ஆள் எனப் பொருளாவதோடு, சொந்தக்காரரின், பண்டங்களிலுள்ள சொத்துவமானது, அல்லது உடன்படிக்கையின் கீழான எவையேனும் சொந்தக்காரரின் உரிமைகள் அல்லது பொறுப்புகள் சாட்டுதல் மூலமாக அல்லது சட்டத்தின் செயற்பாட்டின் மூலமாக சென்றடைந்தவரான ஆள் ஒருவரையும் உள்ளடக்கும்;

"மூன்றுமாள் காப்புறுதி" என்பது, சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டதான, மோட்டார் வாகனமொன்றின் பயன்பாட்டிலிருந்து ஏற்பட்டதான அல்லது அதனிலிருந்து எழுவதான இறப்பு அல்லது உடலூறு தொடர்பான பொறுப்புச் சம்பந்தமான ஏதேனும் காப்புறுதி எனப் பொருளாகும்;

"வாகனப் பதிவுக் கட்டணங்கள்" என்பது, காப்புறுதிக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொகை நீங்கலாக, ஒரு மோட்டார் வாகனத்தின் பதிவு, பயன்பாடு தொடர்பாக, சட்டத்தின்கீழ் வாடகையாளரால் அல்லது அவர் சார்பில் கொடுப்பனவிற்கென வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின்கீழ் சொந்தக்காரரால் ஏற்பாடுசெய்யப்படவேண்டிய ஏதேனும் தொகை எனப் பொருளாகும்.

## அட்டவணை

### வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளில் உட்சேர்ப்பதற்கான

### அறிவித்தல்

..................................................................

(பண்டங்களைப் பற்றிய சுருக்கமான ஒரு விவரணம்)

..............................................தொடர்பான உத்தேச வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழுள்ள தங்கள் நிதிக் கடப்பாடுகள் பற்றிய சுருக்கம்.

1. பண்டங்களின் காசு விலை ... ரூபா............

நிறுவுதல் கட்டணங்கள் ... ... ரூபா............

மொத்தம் ரூபா............

2. நியதிச்சட்டமுறையான விதிப்பனவுகளும் வைப்பும் உட்பட, வாடகைக் கொடுப்பனவு விலை ... ... ரூபா............

3. வாடகைக் கொள்வனவு விலையில் பின்வரும் தொகைகள் உட்சேர்க்கப்பட்டுள்ளன—

(அ) (வாடகையாளருக்கு அல்லது அவரின் கட்டளைக்கு பண்டங்களை அல்லது அவற்றில் எவற்றையேனும் ஒப்படைக்கும் செலவுகள்) கேள்வி விதிப்பனவுகள் ... ரூபா............

(ஆ) ஏதேனும் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான பதிவு அல்லது வேறு கட்டணங்கள் ரூபா............

(இ) காப்புறுதி ... ... ரூபா............

(ஈ) நிறுவுதல் கட்டணங்கள் ... ரூபா............

(உ) வியாபார மொத்த விற்பனை வரி அல்லது வேறு வரிகள் ... ... ரூபா............

4. செலுத்தப்படற்பாலதான தவணைப்பணங்களும் அத்தகைய தவணைப் பணங்கள் எக்கால இடைவெளிகளில் செலுத்தப்படற்பாலதாகும் என்பதுவும் பின்வருமாறாகும் :—

5. சொந்தக்காரரின் எழுத்திலான சம்மதத்துடன் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழான உங்கள் உரிமைகளை சாட்டுதல் செய்யலாம் என்பதுவும், அவர் நியாயமற்ற வகையில் சம்மதத்தினை மறுக்கமாட்டார் என்பதுவும்.

6. 1982 பாவனையாளர் கடன் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, தள்ளுபடியுடன் பண்டங்களை எந்நேரத்திலேனும் கொள்வனவு செய்வதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

7. 1982, பாவனையாளர் கடன் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, உங்கள் சொந்தச் செலவில் சொந்தக்காரருக்கு பண்டங்களைத் திருப்பிக் கொடுப்பதன்மூலம் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையினை எந்நேரத்திலேனும் முடிவுறுத்துவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

(ஈ) மேலேயுள்ள குறிக்கோள்களின் அல்லது அவற்றுள் எவற்றினதும் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான அத் தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத் தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனு மொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமான வாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறு சட்டங்களின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக, கூட்டுத் தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், நடாத்துதல், முடிவுறுத்துதல், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங் களும் அடங்கும்.

கூட்டுத் தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், பதவிதாங்குநர்களையும் கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டு அவ்விதிகளுக்கு இணங்கத் தெரிவு செய்யப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினரான வேறு ஆட்களையுங்கொண்ட முகாமைக் குழுவொன்றினால் கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கமைய, நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் பதவிவகிக்கும் கற்கைவட்டத்தின் முகாமைக்குழுவே கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக் குழுவாக அமைதல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் விதிகள்.

6. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு முரணாகவிராத அத்தகைய விதிகளை, பொதுக்கூட்டம் எதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத எண்ணிக்கையினரின் வாக்குகளைக்கொண்டு காலத்திற்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண் டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டவிடத்து, அதேபோன்ற கூட்டத்தி லும் அதே முறையிலும் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், நீக்கப்பட லாம், அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் விதி களுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

பணிகளை அல்லது கடமைகளை அத்தகைய அபிவிருத்திச் சபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) அபிவிருத்திச் சபையொன்றின் நிறைவேற்றுக் குழுவினது தீர்மானத்தின் மூலம் அபிவிருத்திச் சபையொன்றின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், பணி அல்லது கடமை அத்தகைய அலுவலரால் பிரயோகிக்கப்படுதலானது, நிறைவேற்றப்படுதலானது அல்லது புரியப்படுதலானது தீர்மானத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைந்ததாகவிருத்தலும் அத்துடன் அவ்வாறு குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கத்துக்கு அல்லது நோக்கங்களுக்கு வரையறுக்கப்பட்டதாகவிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஏதேனும் கையளிப்பானது, நிறைவேற்றுக்குழுவின் தீர்மானமொன்றின் மூலம் எந்நேரத்திலும் வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) அபிவிருத்திச் சபையொன்றின் நிறைவேற்றுக் குழுவினால் ஏதேனும் தத்துவம், பணி அல்லது கடமை அத்தகைய அபிவிருத்திச் சபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கப்பட்டிருப்பினும் கூட, நிறைவேற்றுக் குழுவானது அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை, பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது 48அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:—

''மாவட்டச் செயலாளர் தமது தத்துவங்கள் முதலியவற்றைக் கையளிக்கலாம்.

48அ. (1) அபிவிருத்திச் சபையொன்றின் மாவட்டச் செயலாளர், அபிவிருத்திச் சபையினதும் அதன் நிறைவேற்றுக் குழுவினதும் அங்கீகாரத்துக்கமைவாக, எழுத்திலுள்ள பொதுவான அல்லது சிறப்பான கட்டளை மூலம் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுள், பணிகளுள் அல்லது கடமைகளுள் எதனையும் அபிவிருத்திச் சபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றன் மூலம் அபிவிருத்திச் சபையின் மாவட்டச் செயலாளரினால் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை அபிவிருத்திச்

டத்திற் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் தம்முள் ஒருவரை அக்கூட்டத்திற் தலைமைதாங்கவெனத் தெரிவு செய்தல் வேண்டும்.";

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும் :—

"(3) சபையின் எக்கூட்டத்திலேனும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் வாக்குகள் ஏதேனும் பிரச்சினை தொடர்பில் சமமாகப் பிரிந்திருக்கின்றவிடத்து, அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது வேறு உறுப்பினர், உறுப்பினர் என்ற தன்மையில் அவருக்குள்ள வாக்குடன், அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராக இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 9ஆ, 9இ, 9ஈ, 9உ, 9ஊ, 9எ, 9ஏ, 9ஐ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

10. ஒன்பது அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன ; அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆ, 9இ, 9ஈ, 9உ, 9ஊ, 9எ, 9ஏ, 9ஐ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும் :—

"சாட்சிகளை அழைத்தல் முதலியவற்றுக்குச் சபைக்குள்ள தத்துவம்.

9ஆ. சபையின் தவிசாளர் அத்துடன் சபையின் எக்கூட்டத்திற்கும் தவிசாளர் தலைமைதாங்கவில்லையாயின் அக்கூட்டத்தின் தவிசாளர் ஏதேனும் கருமத்தைப் பரிசீலனைக்கெடுத்துத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக—

(அ) சாட்சிகளைக் கட்டளையிட்டழைப்பதற்கும் அவர்களின் வருகையைக் கட்டாயப்படுத்துவதற்கும் ;

(ஆ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கட்டாயப்படுத்துவதற்கும் ; அத்துடன்

(இ) சாட்சிகளுக்கு ஏதேனும் சத்தியத்தை அல்லது உறுதிமொழியை எடுத்தோதுவிப்பதற்கும்,

தத்துவமுடையவராதல் வேண்டும்.

சபைக்கு விண்ணப்பித்தல்.

9இ. இச்சட்டத்தின்கீழ் சபைக்குச் செய்யப்படும் ஒரு விண்ணப்பம் விதித்துரைக்கப்பட்ட முறையில் இருத்தல் வேண்டும்.

வக்பு நியாயசபை.

9ஈ. (1) மூன்று முஸ்லிம்களைக் கொண்டிருக்கும் வக்பு நியாயசபையொன்று அல்லது காலத்துக்குக் காலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையான வக்பு நியாயசபைகள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) உறுப்பினர்களில் ஒருவரை நியாயசபையின் தவிசாளராக ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.

(3) நியாயசபையின் இரண்டு உறுப்பினர்கள் அதன் கூட்ட நடப்பெண்ணாதல் வேண்டும். கூட்ட நடப்பெண் இருந்தாலன்றி, நியாயசபையினால் எந்தக் கருமமும் விசாரணை செய்யப்படுதலாகாது.

(ஆ) அந்த உட்பிரிவின் மீள எழுத்திடப்பட்ட (எ) என்னும் பந்திக்கு நேரேமுன்னர் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :—

" (ஊ) ஜும்மாப் பள்ளிவாசலொன்றின் நம்பிக்கைப்பொறுப் பாளராக அவர் இருக்கும்வேளையில், இன்னொரு ஜும்மாப் பள்ளிவாசலின் நம்பிக்கைப்பொறுப்பாளராகப் பதவிவகித்தால்:

ஆயின், எவ்வாறாயினும் குறிப்பிட்ட இடப்பரப்பொன்றில் நெடுங்கால நடைமுறைக்கு அல்லது வழக்கத்திற்கிணங்க ஒன் றிற்கு மேற்பட்ட ஜும்மாப் பள்ளிவாசல்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பொதுச் சபையொன்றினால் நிருவகிக்கப் படுமிடத்து, ஜும்மாப் பள்ளிவாசலொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர் இன்னொரு ஜும்மாவில் நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியை வகிக்கலாம்; அல்லது ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவானது, அப்பிரி வின் (5) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (இ) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், (3) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை நிறைவேற்றுதல் அத்தகைய கட்டளையை வேறு படுத்தும் அல்லது தள்ளிவைக்கும் கருத்துடன் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீடுமூலம் அல் லது வேறு வழிவகைமூலம் எவ்வகையிலேனும் நிறுத்திவைக்கப்படுதல் ஆகாது. ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, " சபையின் அனு மதி " என்ற சொற்களுக்குப் பதிலாக, " பணிப்பாளரின் அல்லது பிரதிப் பணிப்பாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அனுமதி " என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

15. பின்வரும் பிரிவு, 20 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத் தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என் னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

" அதிகாரமளிக் கப்பட்ட அலுவலர்களும் அவர்களுடைய பணிகளும்.

20அ. (1) பணிப்பாளர், இச்சட்டத்தின் நோக்கங் களுக்காக, அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களை அதிகாரமளிக் கப்பட்ட அலுவலர்களாக இருக்கவென எழுத்தில் அதி காரமளிக்கலாம்.

(2) அதன்சார்பில் பணிப்பாளரினால் அறிவுறுத்தப் பட்டதன்மேல், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொரு வர்—

(அ) எவரேனுமாள் இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறியுள்ளாரா வெனக் கண்டறிதல் வேண்டும்;

(ii) "நளீமிய்யா இஸ்லாமிய நூலகம்" என அழைக்கப்படும், மேற்கோளுக்கும் ஆராய்ச்சிக்குமான இஸ்லாமிய நூலகம் ஒன்றையும்;

(iii) "நளீமிய்யா இஸ்லாமிய பிரசுரப் பணியகம்" என அழைக்கப்படும் இஸ்லாமியப் பிரசுரப் பணியகத்தையும்; அத்துடன்,

(iv) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களையும், குறிக்கோள்களையும் எய்துவதற்கு அவசியமானது எனத் தோன்றுகின்றவாறான வேறு ஏதேனும் சேவையையும்,

உள்ளடக்குகின்றதும், "நளீமிய்யா இஸ்லாமிய கலா நிலையம்" என அழைக்கப்படுவதுமான நிறுவகத்திற்கு நிதியுதவியளித்தலும் அதனைப் பேணிவருதலும், முகாமைசெய்தலும்;

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு அவசியமான எல்லாவற்றையும் தனக்கென ஏற்பாடு செய்தலும்; அத்துடன்

(இ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை எய்துவதன் இடைநேர்விளைவான அல்லது அதற்கு உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும், காரியங்களையும் செய்தலும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறு எழுத்திலான சட்டத்துக்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனமானது தத்துவமுடையதாதல் வேண்டும்; இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன் பெறுதற்கும் அல்லது திரட்டுதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

5. (1) கூட்டுத்தாபனத்தின் எந்த அலுவல்கள், நிருவாக நோக்கங்களுக்காக ஒரு முகாமைக் குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளனவோ அல்லது ஒப்படைக்கப்பட்டுள்ளனவோ கூட்டுத்தாபனத்தின் அந்த அலுவல்கள், அப்போது வலுவிலுள்ளனவான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கிணங்கத்தெரிவு செய்யப்பட்ட கூட்டுத்தாபனத்தின் தலைவரையும், கௌரவ செயலாளரையும், கௌரவ பொருளாளரையும் அத்துடன் பன்னிரண்டுக்குக் குறையாத வேறு ஆட்களையும் கொண்டமைந்த அத்தகைய முகாமைக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், தலைவர் பதவியானது எம். ஐ. நளீம் ஹாஜியாரினால் அவரது வாழ்நாளின்போது வகிக்கப்படுதல் வேண்டும்.